உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 32 | பிரமாதீச - ஆடி - 10—8—73 | இதழ் 9

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. - சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

ஆடிப் பெருக்கில் அருட் பெருக்கு

தமிழ் ஆண்டில் உள்ள பன்னிரண்டு மாதங்களில் இரண்டு மாதங்கள் சிறப்புடைய மாதங்களாகத் திகழ்கின்றன. அவற்றுள் முன்னிற்பது ஆடி. அடுத்தது தை. மாதந்தோறும் வரும் வெள்ளிக்கிழமை, கார்த்திகை, அமாவாசை என்னும் சிறப்பு நாட்கள் ஆடியிலும் தையிலும் மிகச் சிறந்தனவாய் விளங்கக் காண்கின்றோம். 'ஆடிப் பட்டம் தேடி விதை' என்று, வயற் பயிர், தோட்டப் பயிர் முதலிய எல்லாப் பயிர்கட்கும் வித்திடுவதற்கு ஆடி மாதம் உரியதாகின்றது. வேளாண்மைத் தொழிலில் 'ஆனி வரை' என்று ஒரு கணக்குக் கூறுவார்கள் அஃதாவது நிலத்தை ஒருவரிடம் ஒற்றி வைப்பது, மீட்பது பயிர் செய்ய விடுவது முதலியவைகட்கு ஆனி மாதக் கடைசி, ஓர் ஆண்டின் முடிவாக வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பல வகை ஆண்டுகளில் விவசாய ஆண்டு ஆடியில் தொடங்கி,

ஆனியில் முடிவதை அறிகிறோம். ஆடியில் இட்ட வித்துக்களின் பயனை மக்கள் அடைவது தை மாதத்தில். ஆடி மாதம் அம்பிகைக்கும், அவளது கூறாகச் சொல்லப்படுகின்ற சத்திகட்கும், மற்றும் மனைத் தெய்வங்கட்கும் ஏற்புடைய மாதமாகக் கொள்ளப்படுகின்றது. தை மாதத்தில் பொங்கற் பெருநாள் பல வகையில் சிறந்த விழாவாக அமைவதுடன், இம் மாதந்தான் சிவாலயங்களில் நிகழும் பெருவிழாக்களுக்கு முதலாக விளங்குகின்றது.

'ஆடி, தை' என்னும் இவ் இருமாதங்களும் இவ்வளவு சிறப்புடன் விளங்கக் காரணம் என்ன? இவை இரண்டும் ஓர் ஆண்டின் இரு பகுதியாகிய இரு அயனங்களின் தொடக்கமாக அமைவதே. தட்சிணாயனத்தின் தொடக்கம் ஆடி: உத்தராயணத்தின் தொடக்கம் தை. தட்சிணாயனம் தேவர்கட்கு இரவாகவும், உத்தராயணம் பகலாகவும் சொல்லப்படுகின்றன. ஒரு நாளில் இராக் காலத்தின் தொடக்கமாகிய மாலை நேரமும், பகற் காலத்தின் தொடக்கமாகிய காலை நேரமும் சிறப்புடையன ஆதல் போல, தேவர்கட்கு உரிய இரவும், பகலும் தொடங்குகின்ற இந்த இரு மாதங்களும் சிறப்புற்றுத் திகழ்கின்றன.

'வாழ்க்கையை இயற்கையோடு பொருந்தக் கொண்டு வாழ வேண்டும்' எனக் கருதினவர்கள் நம் முன்னோர்கள். வாழ்க்கைக்கு உரியதாகிய இவ்வுலகம் 'காலம், இடம்' என்னும் இரண்டை முதலாகக் கொண்டது; அவற்றுள் இடம் என்பது நிலமே. நிலம் காலங்களை 'முதற் பொருள்' என்றனர் தமிழ் இலக்கண ஆசிரியர். இயற்கை வாழ்வை விரும்பிய நம் முன்னோர், நிலத்தையும், காலத்தையும் அவற்றின் இயற்கையை ஒட்டியே பாகுபாடு செய்தார்கள். நிலம் இயற்கையில், 'காடு, மலை, நாடு, கடல்' என நான்காக அமைந்திருத்தலால், அவற்றை அவ்வாறே வைத்து, "நானிலம்" என்றனர். அது போலவே காலத்தையும் அதன் இயல்பை ஒட்டியே பன்னிரண்டு மாதங்களாக வகுத்தனர். நம் முன்னோர் வகுத்தபடி நாம் பின்பற்றி வரும் ஆண்டில் உள்ள மாதங்களில் கூடுதல் குறைதல்களாக அமைகின்ற நாள்கள், ஓர் ஆண்டுபோல மற்றோர் ஆண்டில் இருப்பதில்லை. அதற்குக் காரணம் இயற்கை நிலை ஆண்டுதோறும் வேறுபடுவதே யாகும். இதனை அறிந்து பின்பற்றுவதில் உள்ள இடர்ப்பாட்டிற்கு அஞ்சி மேலை நாட்டவர், மாதங்களின் நாட்கணக்கைத் தங்கள் விருப்பம்போல் எல்லா ஆண்டிற்கும் ஒருவகையாகவே அமைத்துக்கொண்டனர்; அஃது இயற்கை முறையன்று.

இயற்கையை ஒட்டியே மாதங்களைப் பிரித்த நம் முன்னோர், அவற்றிற்குப் பெயரையும் இயற்கை பற்றியே இட்டனர். நமது ஆண்டில் உள்ள மாதங்களின் பெயர்கள் நாண்மீன் அல்லது நட்சத்திரத்தின் பெயர்களேயாகும். அந்த நட்சத்திரம் அந்த மாதத்தின் பௌர்ணிமையோடு பொருந்துவது.

சித்திரை - சித்திரை. வைசாகி - விசாகத்தை உடையது. ('வைசாகி' என்பது 'வைகாசி' என எழுத்து நிலை மாறி விட்டது.) ஆனி - பூராடம். 'பூர்வாஷாடம்' என்னும் வட மொழிப் பெயர், தமிழில் 'பூராடம்' என்று ஆயிற்று. இந்த நட்சத்திரத்திற்குத் தமிழில் இயல்பாக உள்ள பெயர் 'ஆனி' என்பதே. ஆடி - உத்தராடம். உத்தர ஆஷாடம் - உத்தராடம். 'ஆடி' என்பது இந்நட்சத்திரத்திற்கு இயல்பாக உள்ள தமிழ்ப் பெயர். ஆவணி - அவிட்டம். இவ்விரண்டும் முறையே தமிழ், வடமொழிப் பெயர்கள். புரட்டாசி - பூரட்டாதி. இது புரோஷ்ட பதம்' என்பதன் திரிபு. ஐப்பசி (தமிழ்ப் பெயர்.) - அசுவினி. (வடமொழிப் பெயர்.) கார்த்திகை - கார்த்திகை. மார்கழி - மிருகசீரிடம். இந்நட்சத்திரத்திற்கு 'மார்கழி' என்பது தமிழ்ப் பெயர். 'மான்றலை' என்றும் இது நூல்களில் சொல்லப்படும். தை - பூசம். (புஷ்யம்.) தை, பூசத்திற்குத் தமிழ்ப் பெயர். மாகி - மகத்தை யுடையது. மாகி, 'மாசி' என மருவிற்று. பங்குனி - உத்தரம். இது, 'பால்குனி' என்பதன் திரிபு. இவ்வாறு நட்சத்திரங்களின் பெயர்களையே மாதத்தின் பெயர்களாக அமைத்தது, சாந்திரமானம் பற்றியாகும். அஃதாவது, சந்திரன் மண்ணுலகத்தார்க்கு நிறை நிலாவாகத் தோன்றும்பொழுது எந்த நட்சத்திரத்தோடு ஒட்டிக் காணப்படுகின்றதோ, அந்த நட்சத்திரத்தின் பெயராலே அந்த மாதத்தைக் குறித்தனர். இந்த அமைப்பை ஒட்டியே 'மாதம்' என்பது தமிழில் 'திங்கள்' எனக்கூறப்படுகின்றது. மாதங்களைச் சௌரமானத்தை ஒட்டிக் கூறும்பொழுது 'மேட ரவி, இடப ரவி' முதலாக இராசியின் பெயர்களாக் கூறுவார்கள். அவ்வாறு கூறுவதற்கு அந்த இராசியில் சூரியன் அந்த மாதம் முழுதும் இருக்கின்றான் என்பது கருத்து. 'இருக்கின்றான்' என்பதற்கு, 'உதய காலத்தில் இருக்கின்றான்' என்பதே பொருள். நமது மாதங்கள் இயற்கை நிலையை ஒட்டியவை என்பது இப்பெயர்களாலே நன்கு தெரியவரும். ஆங்கில மாதங்களில் சில, மக்களின் பெயரால் அமைந்துள்ளன என அறிகின்றோம்.

இங்ஙனம் உலகத்திற்கு முதலாகிய இடத்தையும், காலத்தையும் இயற்கையோடு ஒட்டி உணர்ந்து நம்முன்னோர் வகுத்து

வைத்தமையால், அவ்வக்காலங்களில் மக்கள் ஒழுக வேண்டிய நெறியையும் அவர்கள் வகுத்து வைத்தபடி கடைப்பிடிக்க வேண்டுவதே நமது கடமை. அவர்கள் வகுத்து வைத்த நெறி முறைகள் அனைத்திற்கும் காரணத்தை இன்று நம்மால் கண்டு விட இயலாது. எவையோ சிலவற்றிற்குத்தான் காரணம் காண முடியும். 'ஆடிப் பட்டம் தேடி விதை' என்று கூறினவர்கள், 'புதுத் தம்பதிகள் அந்த மாதத்தில் பிரிந்திருத்தல் வேண்டும்' சித்திரை மாதத்தில் மகன் பிறந்தால் செல்வக் குடிக்கு ஆகாது; என்றனர். எனினும், பிற எத்தனையோ வகைகளில் ஆடி சிறந்த மாதமாய்த் திகழ்கின்றது.

'காவிரி அன்னையும் ஆடி பதினெட்டில் தனது முழுப் பெருக் குடன் ஆடி வருகின்றாள்' என்பது பண்டு தொட்டு வரும் கொள்கை. வான் பொய்ப்பினும் தான் பொய்யாது பெருகி வந்து தங்களைக் காப்பாற்றுகின்ற அன்னையின் புது வருகையைக் கண்ட மக்கள் அவளைப் பலவகையாலும் வழிபட்டு வரவேற்று வழியனுப்புவது இயல்பே.

பண்டைக் காலத்தில் பள்ளிப் பிள்ளைகளும், பிறரும் தாங்கள் எழுதிக் கழித்துவிட்ட பனை ஏடுகளைக் கொளுத்துவது கொடுஞ் செயல் என்று கருதிச் சேமித்துவைத்திருந்து, ஆடிப் பதினெட் டில் காவிரி அன்னையின் கையில் ஒப்புவித்துவிடுவார்கள். இந்த ஏடுகள் 'வேண்டா' என்று கழிக்கப்பட்ட ஏடுகள் என்று அறியாதோர், 'காவிரி அன்னையை வழிபடும்பொழுது, எழுதிய ஏடுகளும் சில கொடுக்கவேண்டும்போலும்' என்று தவறாகக் கருதிக்கொண்டு, தங்கள் வீடுகளில் அருமையாக வைக்கப்பட் டிருந்த புத்தகங்களில் இருந்தும் சில ஏடுகளை உருவியோ, அல்லது புத்தகங்களையோ கொண்டுபோய்ப் போடுவாராயினர். இதனால், மறைந்தொழிந்த நூல்கள் பல. இக்காலத்தில் பனை ஏடுகள் இல்லை என்றாலும், இவ்வாறு நிகழாதிருக்கும்படி பார்த் துக்கொள்வது அறிஞர் கடனாகும். ஆடிப் பெருக்குடன் ஆடி அமாவாசை கடலாட்டிற்கு உரியதாதலும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய நல்ல ஆடி மாதம் சமயாசாரியர்களில் அடியார் பெருமையை விளக்கியருளிய சுந்தரர், கயிலை உடலொடு வெள்ளானைமேல், தோழர் சேரமான் பெருமானுடன் கயிலை சென்ற மாதமாகவும் அமைந்துள்ளது.

"சித்திரைச் சதையத்(து) அப்பர், சிறந்தவை காசி மூலத்து
அத்தரைப் பணிசம் பந்தர், ஆனிமா மகத்தில் அந்த
முத்தமிழ் வாத ஊரர், முதியநல் லாடி தன்னில்
சுத்தமாம் சோதி நாளில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்"

என்பது சமயாசாரியரிடத்து மிக்க அன்பு பூண்ட பெரியார் ஒருவரது வாக்கு. இதில் ஆடிமாதத்தை 'முதிய நல்லாடி' எனச் சிறப்பித்திருத்தல் காணத்தக்கது. ஆடிமாதம் முதுவேனிற் காலத்தின் பிற்பகுதி யாதலின் 'முதிய ஆடி' எனப்பட்டது. காவிரிப் பெருக்கு முதலிய பல சிறப்புக்களுடன் சுந்தரர் கயிலை சேர்ந்த சிறப்பும் உடைமைபற்றி 'நல் ஆடி' ஆயிற்று.

இம்மாதத்தில் வரும் அமாவாசைநாள், தருமையாதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் கயிலை கண்ட நாளாகவும் அமைந்து, ஆதீனத்தில் சிறந்து விளங்குகின்றது. அப்பர் பெருமான் திருவையாற்றில் கயிலைக் காட்சி கண்டதும் இந்த ஆடி அமாவாசையாக இருப்பதும் இங்கு நினைக்கத் தக்கது. எனவே, அனைவர்க்கும் மகிழ்ச்சியைத் தரவருகின்ற ஆடிப்பெருக்கு, சைவசமயிகட்கு அருட்பெருக்காகவும் அமைந்திருத்தல் எண்ணி மகிழத்தக்கது.

அண்மையில் நிகழ்ந்த அனைத்துச் சிறப்புக்களிலும் பங்கு கொண்டு மகிழ்ந்த அன்பர்கள், நம் முன்னோர் வகுத்த இயற்கையை ஒட்டிய இனிய நெறியின் சிறப்பை உணர்ந்து ஒழுகி இருமை இன்பமும் எய்துவார்களாக.

ஏழு பாவங்கள்!

கொள்கை இன்றி அரசியல், உழைப்பின்றி செல்வம், மனச்சாட்சி இன்றி மகிழ்ச்சி, பண்பாடு இன்றி அறிவு, அறப்பண்பு இல்லாத வாணிபம், கருணை இன்றி விஞ்ஞானம், தியாகம் இன்றி பக்தி ஆகிய பாவங்களுக்கெதிராக 1921ம் ஆண்டு ஆரம்பத்திலேயே நாட்டு மக்களை மகாத்மா காந்தி எச்சரித்தார்.

இந்த 7 பாவங்கள்தான் இன்று நமது சமுதாயத்தில் பிரபலமாக உள்ளது என்றும், இவற்றை அகற்ற நாம் உடனடி நடவடிக்கை எடுக்காதவரை நாம் ஒரு நாடாகப் பிழைத்திருக்க முடியாது என்றும் திரு. கிரி கூறினர்.

நன்றி. தினமணி, 29—7—73.

சுவர்க்க நரக இயல் — — பாவப் பயன்*

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்
திரு. ச. தண்டபாணி தேசிகர்

முருகப்பெருமான் அகத்தியனை நோக்கி, பாவ ஆன்மாக்கள் யமலோகத்தை அடையும் முறைமையை அறிவிக்கிறோம் கேட்பாயாக என்று அறிவிக்கிறார். எண்பத்து ஆறாயிரம் யோசனை அளவு பூமிக்குமேல் நீண்டு மகாமேரு என்னும் மலைக்குத் தென்பால், யமதர்மராசன் விற்றிருந்து அரசு செய்யும் யமனி என்னும் படைவீடு விளங்குகிறது. அது பாவிகளுக்கு அதி தூரமாயும் புண்ணியவான்களுக்கு மிகச்சமீபமாயும் தோன்றும். அங்கு சித்ரகுப்தன் என்னும் கணக்கன் அவரவர் செய்த நல்வினை தீவினைகளை நிச்சயித்து இவர் இது செய்தார் என்று சொன்ன அளவிலே யமதர்மன் அவர்களை அழைத்து வரும்படி சொல்லுகின்ற வழிவகைகளை முதற்கண் சொல்லுகின்றோம்.

யமதூதர்கள் மைமலை போலக்கருத்தவர்கள். பெருத்த சரீரம் உடையவர்கள். வச்சிரத்தால் ஆகிய சட்டை அணிந்தவர்கள். பாம்பை ஒத்த விஷத்தன்மை உடையவர்கள். வஞ்சகர்கள்; கொடியவர்கள். யமதர்மனுடைய ஆணையைத் தவறாதவர்கள். நெருப்பைக் கக்குகின்ற கண்களை உடையவர்கள். பிடித்ததை விடாதவர்கள். அத்தகைய தூதர்கள் உயிர்களில் இவர் இவர் செய்த புண்ணிய பாவங்கள் இவை என்றும், இறுதிக்காலம் இது என்றும் அறிய வல்லவர்கள். ஒருகையில் சூலமும், ஒரு கையில் பாசமும் உடையவர்கள். பாவிகளாகிய மக்கள் பதறப் பதற உயிரையும் உடலையும் பிரிப்பவர்கள். கொடிய பாவிகளைத் திருப்பி மடக்கி வளைத்து இரண்டு கைகளையும் பின்புறமாகக் கட்டி உடம்பிலெல்லாம் இரத்தம் ஒழுக சூலத்தால் குத்தி அலற அலற வெட்டி ஆகாயத்தின் கண் வீசுவார்கள்.

---

* குறிப்பு :- பாடல் 41 முதல் 81 முடிய.

பாவிகள் உளம்மெலிந்து துன்பம் மிக துணை அற்று அவர் இழுக்கின்ற வழியிலே செல்வார்கள்.

வழியின் இயல்பைக்கூறுகிறோம் கேட்பாயாக! முள் அடர்ந்த வழி. அந்த முட்கள் காலின்கண் தைக்கும். தைத்த முள்ளை வாங்க வழி அறியாமல் விழ்ந்து கிடப்பவர்கள் சிலர். பருக்கைக் கற்கள் காலில் குத்த நடக்கமுடியாமல் விழ்ந்து கிடப்பவர்கள் சிலர்.

சில பாவிகள் புதைசேற்றில் அடிவைத்து நடக்க, காலில் ஒற்றிய சேற்றைக் கழுவமுடியாமல் மனம் வருந்துவர். சிலர் பள்ளம் படுகுழிகளில் விழுந்து எழுந்து வருந்துவர். சிலர் அடர்ந்துகிடக்கின்ற நாணல் புற்கள் உடம்பைக் கிழிக்க செல்லுவர். சிலர் சூடான புதைமணல் உள்ள வழிகளிலும், சிலர் பெரிய மலைகளில் உள்ள ஏற்ற இரக்கங்களிலும், சிலர் வெண்பொடி மூடிய நெருப்பு மிகுந்த வழிகளிலும், சிலர் அம்புபோல் குத்தும் சல்லியும் ஓடும் பரந்த வழிகளிலும், சிலர் நெறிஞ்சில் கூர்மையான வசிகள் நிறைந்த வழிகளிலும், மூங்கிற்காடு பரந்த வழிகளிலும் சென்று வருந்துவர்.

சிலர் இருள் அடர்ந்த வழிகளிலும், தீயில் காய்ச்சிய இரும்புச் சங்கிலி பின்னிக்கிடக்கும் வழிகளிலும், அடிவைக்க மாட்டாமல் அழுது இருப்பார்கள். சிலர் காடு தீப்பற்றி எரிய மனங் கலங்குவார்கள். சிலர் பனியால் வருந்துவர். சிலர் மணலில் கழுத்தளவு புதைய வருந்துவர், நெருப்புமழை பெய்ய அதில் அகப்பட்டு வருந்துவர் சிலர். தலையில் தீப்பற்றி எரிய வருந்துவர் சிலர்.

சிங்கங்கள் வாழ்கின்ற காட்டில் செல்வர் சிலர். புலிகள் குரல்வளையைக் கவ்வ வருந்துவர் சிலர். முள்ளம்பன்றி, கரடி, சிறுத்தை, மலைப்பாம்பு இவற்றால் வருந்துவர் சிலர். புழுக்கள் உடம்பைக் குடைய வருந்துவர் சிலர். அட்டைகள் கடிக்க, கழுகு பிடுங்க, காகம் கொத்த வருந்துவர் சிலர். மதம்பட்ட யானைகளிடம் அகப்பட்டு வருந்துவர் சிலர். இடாகினி, பேய், சூரற மகளிர் இவர்கள் நெருங்கிய வழிகளில் சென்று வருந்துவர் சிலர். இராக்கதர், பூத பிசாசர்கள் நெருங்கிய வழிகளில் செல்வர் சிலர். சிலர் அம்புமழையில் அகப்பட்டு வருந்துவர். சிலர் வச்சிரம், சக்கரம், சூலம், வேல் இவை மழைபோல் பெய்ய அதில் அகப்பட்டு வருந்துவர்.

சிலர் புழுதிக்காற்றிலும், சுழல்காற்றிலும் வீஷக்காற்றிலும், பனிக்காற்றிலும் புயல்காற்றிலும் அகப்பட்டு வருந்துவர். சிலர் பசிவருத்த உணவு கிடைக்காமல் வருந்துவர். யமதூதர்கள் அழைத்துப் போகும் வழி இவ்வண்ணம் இருக்கும்.

அழைத்துப் போகும் முறைமை :-

காலில் விலங்கிட்டுத் தலைகீழாகவும், முகமும் மார்பும் பூமியில் தேயவும் இழுத்துச் செல்வார்கள். அறம் சிறிதும் செய்யாது, அறவழி நில்லாது புகழில்லாத கொடிய பாவிகளைப் பாசக்கயிற்ருல் கட்டி தரையிலே கிடத்தி இழுத்துச் செல்வார்கள். ஈவு இரக்கம் இல்லாத கொடிய பாவிகளை யமதூதர்கள் கோடரியால் நெற்றியையும் மார்பையும் கொத்தி இழுத்துச்செல்வார்கள். கள்வர்களை உடம்பு விண்டுபோக மூங்கிற் காட்டிலே இழுத்துச் செல்வார்கள். கோள் சொல்பவர்களையும், இரக்கம் இல்லாதவர்களையும், பெரியோர் பேச்சைக் கேட்காதவர்களையும் நெருப்புப் பற்றி எரிகின்ற காட்டின் வழியாக அழைத்துச் செல்வார்கள். சிலரைப் புறங்கையைக்கட்டி வயிற்றில் குத்தி குடல் சரியச்சரிய அழைத்துச் செல்வார்கள். சிலரை உள்ளங்கை, தலை, முழங்கால் இவற்றை நெருப்பில் பழுக்கக் காய்ச்சிய இருப்பாணி அறைந்து அழைத்துச் செல்வார்கள். சில பாவிகளை, நாக்கில் துளைத்து அதன் நடுவே மூளையை இருக்கி அதில் கயிறு கோர்த்து அழைத்துச் செல்வார்கள். சிலரை மூக்குக் குத்தியும், கன்னத்தைத் துளைத்து கயிறு பூட்டியும், உதட்டைத் துளைத்து ஊசி கோர்த்தும், காதுத் துளைகள் இரண்டிலும் கயிறு கோர்த்தும் அழைத்துச் செல்வார்கள். சிலரைத் துண்டந் துண்டமாக வெட்டி வழிநெடுக போட்டுச் செல்வார்கள். வழிநெடுகக் குருதி சிந்தும்படி அழைத்துச் செல்வார்கள். இங்ஙனம் அதிபாதகம் மகாபாதகம் செய்த மக்களை யமதூதர்கள் அழைத்துப் போகும் போதே வருத்துவர். இங்ஙனம் அழைத்துப்போன பாவ ஆன்மாக்கள் யமதர்மன் முன்னிலையில் கொண்டுபோய் நிறுத்தப் படுவார்கள். யமதூதர்கள் யமனைப் பார்த்து அரசே தங்கள் ஆணையும் எம்முடைய பாசமும் இருப்பதால் இந்தப் பாவிகள் அழைத்தவுடன் வந்தார்கள். வருந்த வேண்டிய அளவு வழியில் வருந்தி விட்டார்கள். சிவநெறி ஒழுகாமையால் துன்பம் அடைந்தோம் என்பதை உணர்ந்திருக்கிறுர்கள். இந்நிலையில் இவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்று கேட்க யமன் கூறியது.

(தொடரும்)

தேனும் அதன் மகத்துவமும்

தற்போதுள்ள அதிக வீரிய சக்தியுள்ள உயிர்காப்பு மருந்துகளைக் காட்டிலும் பச்சைத் தேனுக்கு அதிக மகத்துவம் உள்ளதாகப் பல மேலைநாட்டு மருத்துவ நிபுணர்கள் கூறுகிருர்கள். வெட்டுக்காயங்களேயும், புண்ணேயும் ஆற்றும் சக்தி பச்சைத் தேனுக்கு உண்டு. பழங்கால எகிப்தியர்கள் தேனை ஒரு வீரியமுள்ள சக்தி வாய்ந்த மருந்தாகக் கருதினர். சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னல் எகிப்தில் கட்டப்பட்ட ஒரு கல்லறையைச் சமீப காலத்தில் தோண்டிப்பார்த்ததில் அந்த புதைக்கப்பட்ட சடலத்திற்குப் பக்கத்தில் ஒரு பெரிய ஜாடி நிறைய தேன் வைக்கப்பட்டிருந்ததாம். அதை ருசித்துப் பார்த்ததில் சிறிதும் கெடாமல் இருந்ததாம். அமெரிக்காவில் ஒரு பெண்மணி சமயலறையில் வேலே செய்து கொண்டிருக்கும்போது கையில் ஒரு பெரிய வெட்டுக்காயம் ஏற்பட்டுவிட்டது. அந்த வெட்டுக் காயத்திற்கு சுமார் 12 தையல்களாவது போடவேண்டியிருக்குமாம்! ஆனல் அந்த அமெரிக்க மாது ஆஸ்பத்திரிக்குச் செல்லவில்லே. அதற்கு மாருக ஒரு அவசரகால முதலுதவி தனக்குத் தானே செய்து கொண்டார். தன்னுடைய பாட்டியிடமிருந்து கேள்விப்பட்ட ஒரு விட்டு வைத்திய முறை ஞாபகத்திற்கு வந்தது; தேனே எடுத்து வாரி வாரி அந்த வெட்டுக் காயத்தின்மீது தெளித்து அப்படியே கட்டிக்கொண்டார். மறுநாள் ஆஸ்பத்திரிக்குப்போய் தையல்போட்டுக் கொள்வதாக இருந்தார். மறுநாள் கட்டை அவிழ்த்துப் பார்த்தபோது சிறிதும் ரத்தக்கசிவு ஏற்படாமல் அந்தச் சதை தையல் போட்டமாதிரி ஒட்டிக்கொண்டிருந்ததால், மீண்டும் ஆஸ்பத்திரிக்குச் செல்லாமல் அதே முறையைக் கையாண்டு பத்து நாட்களில் அந்த வெட்டுப்பட்ட இடம் வடுத் தெரியாமல் காய்ந்து விட்டதாம். அதேபோல் ஒரு மாதுக்கு மார்பகத்தில் புற்றுநோய்கண்டு அறுவை சிகிச்சை நடந்ததாம். ஆனல் புண் ஆறவில்லே. அந்த ரண சிகிச்சை நிபுணர் தினந்தோறும் பச்சைத்தேனேப் புண்ணின்மீது ஊற்றி தினந்தோறும் கட்டுப்போட்டார். புண் உடனே சில நாட்களில் ஆறிவிட்டதாம்.

மேலும் பச்சைத் தேனில் சில அதிவீர்ய தாது சத்துக்கள் அடங்கியுள்ளனவாம். டைபாய்ட் ஜுரத்தை உண்டாக்கும் கிருமிகளே 48 மணி நேரத்தில் பூண்டோடு அழிக்ககூடிய சக்தி தேனில் அடங்கியிருக்கிறதாம். அதேபோல் வயிற்றுப்போக்கை

உண்டாக்கும் கிருமிகளை 10 மணி நேரத்தில் அழிக்கக்கூடிய சக்தி தேனுக்கு உண்டாம். சமீபத்திய வைத்திய விஞ்ஞான சோதனைகளிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டிருக்கிற உண்மை இது. குழந்தைகளுக்குப்பாலுடன் தினந்தோறும் சிறிது தேனை விட்டுக்கொடுத்தால் அந்தக் குழந்தை எவ்வித வியாதியும் இல்லாமல் நன்றாக வளருகிறதாம். பச்சைத்தேனில் செம்பு, சுண்ணாம்பு, பாஸ்பேட், இரும்பு, கந்தகம், மாங்கனீஸ் ஆகிய உலோகச் சத்துக்கள் இயற்கையாகவே அடங்கியுள்ளன.

நன்றி! —தினமணி சுடர் 29-7-79.

எளியோரும் செய்தற்குரிய அறம்

எல்லோரும் அறம் செய்து உய்திபெறலாம். எளியோரும் செய்யலாம். இந்த அறங்களைப் பின்பற்றி அனைவரும் கடைத்தேறலாமே. நாடோறும் காலையில் எழுந்து நீராடி இறைவனுக்கு ஒரு பச்சிலை இட்டு வழிபடுதல். ஒவ்வொரு நாளும் பசுவுக்கு ஒரு கைப்பிடியாவது புல் அல்லது உணவு அளித்தல். உண்ணும்போது ஒரு கைப்பிடி சோறு எளியவர்க்கு வழங்குதல், பிறரிடம் இனிய உரைகளால் பேசுதல் இவை செய்தற்குப் பொருளோ அதிக முயற்சியோ தேவையில்லையல்லவா? இந்த நான்கு அறங்களும் தரும் பயன் பெரிது. உலகம் இதை உணர்ந்து அறஞ் செய்வதாக.

யாவர்க்கும்ஆம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்கும்ஆம் பசுவுக்குஒரு வாயுறை
யாவர்க்கும்ஆம் உண்ணும்போதுஒரு கைப்பிடி
யாவர்க்கும்ஆம் பிறர்க்கு இன்னுரை தானே.

— திருமந்திரம்.

திருவருட்பயன் விளக்க உரை

தருமையாதீனப் புலவர், மகாவித்துவான்,

திரு. சி. அருணைவடிவேல் முதலியார்.

(மலர் 32. இதழ் 7. பக்கம் 361 - இன் தொடர்ச்சி)

10 - ஆம் அதி. அணைந்தோர் தன்மை

அஃதாவது, பாசத்தின் நீங்கிச் சிவத்தைத் தலைப்பட்டவரது இயல்பு 'அணைந்தோர்' என உயர்திணையாற் கூறுதலின், இவர், மக்க ளுடம்பில் நின்றே சிவத்தைத் தலைப்பட்டு நிற்பவராதல் பெறப்படும். இவரை வடநூலார், 'சீவன் முத்தர்' என்ப. மேலை யதிகாரத்திற் கூறப்பட்டவாறு ஐந்தெழுத்துச் சாதனையில் நின்று பயன் அடைந்தவரது இயல்பைக் கூறுதலின், இவ்வதிகாரம் அதனோடு இயைபுடையதாயிற்று.

முதற் குறள்,

> " ஓங்குணர்வி னுள்ளடங்கி உள்ளத்துள் இன்பொடுங்கத்
> தூங்குவர்மற் றேதுண்டு சொல் "

எனவரும்.

இதன் பொருள் :- ஓங்கு உணர்வின் உள் அடங்கி - தமது உணர்வைக் கீழ்ப்படுத்துத் தான் மேற்பட்டு விளங்குகின்ற சிவனது ஞானத்திற்கு உள்ளாய் அடங்கி; இன்பு உள்ளத்துள் அடங்க - அங்ஙனம் அடங்கி நிற்றலால் விளைகின்ற பேரின்பம் தமது அறிவின்கண்ணே அடங்கி நிற்க; தூங்குவர் - அவ்வின்பத்தில் திளைத்திருத்தலைத் தவிர வேறொன்றை அறியாதவர்க்கு ; சொல் ஏது உண்டு - சொல் ஒன்றேனும் உண்டாகுமோ !

விளக்க உரை :- 'ஏது உண்டு' என்னும் வினா, யாதும் இன்மை குறித்தது. சொல் நினைவின் வழியதாதலின், சொல் எழாமையால், நினைவெழாமை கூறியவாறு. இன்பத்துள் ஆழ்ந்தமையால் நினைவு மேல் எழாதாயிற்று. ஆகவே, நினைவும், அதன்வழிச் சொல்லும் எழுந்தவழி இன்ப நுகர்ச்சி நீங்குதல் பெறப்படும். இஃது இயல்பாக, இதனை எடுத்தோதி வலியுறுத்தது, இவ்வின்பத்தைத் தலைப்பட்டோர், பயிற்சி வயத்தால் நினைவு தலையெடுக்குமாயின், அங்ஙனம் எடாதவாறு அறிவினால்

அடக்கி அவ்வின்பத்துள் ஆழ்த்துவர் என்பது உணர்த்துதற் பொருட்டாம். அதனுல், இஃது, அணைந்தோரது தன்மை யாதல் அறியப்படும். "ஓங்குணர்வி னுள்ளடங்கி உள்ளத்துள் இன்பொடுங்கத் - தூங்குவர்" என்றது, 'அணைந்தோராவார் இவர்' என்பதனை அனுவாத முகத்தாற் கூறியவாறு. 'தூங்குவர்க்கு' என்பதில் நான்கனுருபு தொகுத்தலாயிற்று. இவ்வாறன்றி, 'அணைந்தோர்' என்னும் எழுவாயை அதிகாரத்தால் வருவித்து, 'தூங்குவர்' என வேறு தொடராக முடித்து, 'அணைந்தோராவார் இவர்' என்பதனை எடுத்தோதியதாகவே உரைப்பாரும் உளர்.

இதனுல், அணைந்தோராவார் இவர் என்பதும், அவர், தாம் பெற்ற இன்பத்தினின்றும் நீங்காமையும் கூறப்பட்டன.

இரண்டாவது குறள்,

> "ஐந்தொழிலும் காரணர்க ளாந்தொழிலும் போகநுகர்
> வெந்தொழிலும் மேவார் மிக"

எனவரும்.

இதன் பொருள் :- ஐந்தொழிலும் - சிவனைப்போலவே நின்று படைத்தல் முதலிய ஐந்து தொழிலையும் செய்தலையும்; காரணர்கள் ஆம் தொழிலும் - அவ்வாறன்றிச் சிவனது ஆணையைப் பெற்றுப் படைத்தல் முதலியவற்றில் ஒவ்வொரு தொழிற்கு முதல்வராய் நின்று செய்தலையும்; போகம் நுகர் வெந் தொழிலும் - முன்னை வினையின் பயன்களை விருப்பு வெறுப்புக்களுடன் கூடி அனுபவிக்கின்ற கொடிய செயலைச் செய்தலையும்; மிக மேவார் - சிவனை அணைந்தோர் சிறிதும் விரும்பார்.

விளக்க உரை :- 'அவை யாவும் உயிர்கட்குத் துன்பமாவனவே யல்லது இன்பம் ஆகாமையை உணர்ந்தோராதலின் விரும்பார்' என்றபடி. இதனுல், 'உயிர் சிவானுபவம் ஒன்றையே அனுபவிக்கற்பாலது' என்பது விளங்கும்

> "உம்பர்பிரான் உற்பத்தி யாதிகளுக் குரியன்;
> உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்தே" * (1)

என்றது சிவஞான சித்தி. இங்ஙனமாகவே, உலகத்தார் வியப்பப் பல விம்மிதங்களைச் செய்ய விரும்புதலும் அஞ்ஞானத்

---

* (1) சூ. 11-10.

தின் வினைவாகிய பந்தமாவதல்லது, மெய்ஞ்ஞானத்தின் வினைவாகிய வீடாகாமை, தானே பெறப்படும். வினைப்பயன்கள் வினைவழி விருப்பும் வெறுப்புங் கொண்டு அவற்றில் அழுந்துதல், பிறவிக்குக் காரணமாதலின் அதனை, "வெந்தொழில்" என்றார். "மிக" என்பது மேவுதலைச் சிறப்பியாது, "மேவார்" என்ற எதிர் மறையைச் சிறப்பித்தது.

இதனால், உயிர்க்கு முடிநிலை இன்பமான சிவானுபவத்தைப் பெற்றோர், வேறொன்றை விரும்பாமை கூறப்பட்டது. இதனை, "கொள்ளேன் புரந்தரன் மால் அயன் வாழ்வு *(2) கொன்றைத்தொங்கலான் அடியவர்க்குச் சுவர்க்கங்கள் பொருளலவே" *(3) என்பனபோன்ற திருமொழிகள்பற்றி அறிக. இதனானே, 'முத்தியடைந்த ஆன்மாக்கள் சிவனோடு ஒப்பநின்று ஐந்தொழில் செய்யும்' எனக் கூறும் சிவசமவாத சைவர்கள் கொள்கை மறுக்கப்பட்டது.

மூன்றாவது குறள்,

"எல்லாம் அறியும் அறிவுறினும் ஈங்கிவர்ஒன்
றல்லா தறியார் அற"

எனவரும்.

இதன் பொருள் :- எல்லாம் அறியும் அறிவு உறினும் - எல்லாவற்றையும் அறியும் இயல்பினதாகிய சிவனது அறிவைத் தம் அறிவிற்கு முதலாகத் தாம் பெற்றாராயினும் ; இவர் - இவ்வணை ந்தோர் ; ஈங்கு - இம் முத்தி நிலையில் ; ஒன்று அல்லது அற அறியார் - அவ்வறிவைக் கொண்டு ஒரு பொருளாகிய சிவனையன்றி வேறொன்றை அறிதலைச் சிறிதும் செய்யார்.

விளக்க உரை :- சிவஞானம் கண்ணாகச் சிவனை யறியாது பிறிதொன்றை அறிதல் பந்தமாய்முடியும் ஆதலின், அறிவராகிய அவர், பொற்கொழுக் கொண்டு வரகுக்கு உழுவதுபோல அவ்வாறு செய்யார் என்பதாம்.

"பொற்கொழுக் கொண்டு வரகுக் குழுவதென்
அக்கொழு நீயறிந் துந்தீபற ;
அறிந்தறி யாவண்ணம் உந்தீபற" *(4)

என்றது காண்க.

---

* (2) திருவாசகம் – திருச்சதகம் – 2.
* (3) திருமுறை – 2-41-7.
* (4) திருவுந்தியார் - 38.

இதனால், 'உயிர் முத்தி நிலையிலும் சிவானுபவம் ஒன்றையே நுகருமாயின், பிறவற்றை அறியமாட்டாமை அதற்கு இழுக்காம்' எனத் தடை நிகழ்த்துவாரது கூற்றுப்பற்றி நிகழும் ஐயம், 'பிறவற்றை அறிய மாட்டாமையான் அன்று; விரும்பாமையானே யாம்' என விடை கூறி நீக்கப்பட்டது.

நான்காவது குறள்,

" புலன்அடக்கித் தம்முதற்கண் புக்குறுவர் போதார்
தலன்நடக்கும் ஆமை தக "

எனவரும்.

இதன் பொருள் :- தலன் நடக்கும் ஆமை தக - நீரில் இல்லாது நிலத்தின்கண் உலாவும் ஆமையோடு ஒப்ப; புலன் அடக்கி - ஐம்புலன்களில் செல்கின்ற மனத்தை அவ்வாறு செல்லாமல் அடக்கி' தம் முதற்கண் புக்கு உறுவார் - தம் அறிவிற்கு முதலாய் உள்ள சிவனது வியாபகத்தினுள்ளே அடங்கி நிற்பார் சிவனை அணைந்தோர்; போதார் - அந்நிலையினின்றும் நீங்கிப் புறத்து வாரார்.

விளக்க உரை :- ஆமை நிலத்தின்கண் இயங்கும்பொழுது தனக்குத் தீங்கு வருவதாக உணரின், நான்கு கால், தலை என்னும் ஐந்து உறுப்புக்களையும் விரையச் சுருக்கி ஓட்டினுள்ளே அடங்கிப் புறப்படாது கிடக்குமாகலின் அஃது, உலகில் வாழுங்கால் ஐம்புல உணர்வால் உலக வாசனை தாக்குவதாக உணரின், அவ்வுணர்வை அடக்கிச் சிவஞானத்துள்ளே ஒடுங்கி உலகை நினையாதிருக்கும் அணைந்தோர்க்கு உவமையாயிற்று. "உறுவர்" என்றே ஒழியாது, "போதார்" என எதிர்மறுத்தும் கூறியது, ஓட்டினுட் கிடந்த ஆமை பின்னர்ப் புறப்படுதல் உண்டாதலின், அவ்வாறு இவர் புறப்படுதல் இல்லை என்பது உணர்த்துதற்கு.

இதனால், அணைந்தோர் உலக வாதனை நீங்கி நிற்குமாறு கூறப்பட்டது.

ஐந்தாவது குறள்,

" அவனையகன் றெங்கின்றாம்; ஆங்கவனு வெங்கும்
இவனையொழிர் துண்டாத லில் "

எனவரும்.

இதன் பொருள் :- எங்கு அவனை அகன்று இன்றும் - யாதோரிடமும் சிவனை யின்றி யில்லையாம். ஆங்கு - அவ்வாறே; சிவனை

ஒழிந்து எங்கும் உண்டாதல் இல் - சிவனை அணைந்த இந்தச் சீவன் முத்தனையின்றி உளதாதல் இல்லை.

விளக்க உரை ;- என்றது, ‘சிவனை அணைந்தோரும் சிவனைப் போலவே எங்கும் வியாபகராய் நிற்பர்’ என்றவாறு. எனவே, மலப் பிணிப்பால் பெத்தத்தில் தனது வியாபகத்தை யிழந்து அணுவாய் நின்ற ஆன்மா, மலம் நீங்கிய முத்தி நிலையில் இயல்பாய தனது வியாபகத்தைப் பெற்று காலமும், இடமும் ஆய வரையறையின்றி, எங்குமாய், எஞ்ஞான்றும் சிவனது இன்பத்தை நுகர்ந்து நிற்கும் என்க.

“ கண்ணுதல்தன் நிறைவதனிற் கலந்து, காயங்
கழிந்தக்கால் எங்குமாய்க் கருதரன்போல் நிற்பன் ”*

எனக் கூறுதலால், இந்நிலை, உடம்பு உள்ளபொழுது பசு கரணங்கள் சிவ கரணங்களாய் ஏக தேசக் காட்சியின்றி வியாபக உணர்வையே தந்து நிற்கும் முறையாலும், உடம்பு நீங்கிய காலத்துச் சிவஞானமே பற்றாக நேர்நிலையாலும் (சாட்சாத்தாயும்) காணப்படும் என்பது அறிக.

இதனால், ‘உடம்புடைய யோகிகள் உடம்பின்கண் நின்றாராயினும், அவற்றால் ஏக தேசிகளாய் நில்லாது வியாபகம் உடையராய் நிற்பர்’ என்பது கூறப்பட்டது.

‘அங்ஙனம் ஆதல் எவ்வாறு கூடும்’ என மலைவார்க்கு, ‘சீவத் தன்மை நீங்கிச் சிவம் ஆன தன்மையாலே கூடுவதாம்’ என மலைவு நீக்குவார், “அவன் ஆக” என்றார். கடைக் குறையாய் நின்ற “ஆக” என்னும் செயவென் எச்சம், ‘மழை பெய்யக் குளம் நிறைந்தது’ என்பதிற்போலக் காரணப் பொருட்டாய் நின்றது. ‘அவனும்’ என்பது பாடமாயின், ‘அவனும் இவனை ஒழிந்து எங்கும் உண்டாதல் இல்’ என மாறிக் கூட்டி, உடம்பொடு புணர்த்தலால் மலைவு நீக்கியதாக உரைக்க. சிவத் தன்மை நீங்கிச் சிவமாம் தன்மையைப் பெற்றார் எங்குமாய் நிற்றல் இயல்பாதலை இனிது விளக்குவார், “அவனையகன் றெங்கின்றும் ஆங்கு” எனச் சிவனது தன்மையாய வியாபக நிலையை எடுத்தோதி, உவமை கூறினர். முதற்கண் வந்த ‘எங்கு’ என்பதில் உம்மை தொகுத்தலாயிற்று. இரண்டிடத்தும், ‘எங்கு’ என்னும் இடைச் சொல், பெயர்ச்சொல் தன்மை எய்தி நின்றது. (தொடரும்)

---

* சிவஞானசித்தி சூ 8.31.

அட்டைப்பட விளக்கம்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருச்சிராப்பள்ளிக்கு எழுந்தருளல்.

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன் உள்ளம் குளிரும்மே,- சம்பந்தர்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனமும் திருச்சிராப்பள்ளியும்தொடர்புடையவை. திருச்சிராப்பள்ளியில் ஸ்ரீ தாயுமான சுவாமி திருக்கோயில் மௌனமடம் கட்டளையும், இந்நகரருகே உள்ள (உய்யக்கொண்டான்) திருக்கற்குடிமாமலைத் திருக்கோயிலும் ஆதீன அருளாட்சிக்கு உட்பட்டவை.

திருமூலர் மரபில் வந்தருளியவர் ஸ்ரீ சாரமாமுனிவர். அவர் வழி வந்த ஸ்ரீ மௌனகுருசுவாமிகள் தாயுமான சுவாமிகளுக்கு அருள்உபதேசம் புரிந்தவர். ஸ்ரீ மௌனகுரு சுவாமிகள் பெயரால் விளங்குவது மௌனமடம். திருக்கற்குடிமாமலை மூவர் தேவாரமும் பெற்ற திருத்தலம்.

தருமையாதீனம் 26வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞானபீடமேறிய பின்னர் முதன் முறையாக 19—8—73 அன்று திருச்சிராப்பள்ளி மௌனமடத்திற்கு எழுந்தருளுகின்றார்கள். இதன் நினைவாக ஸ்ரீ தாயுமானசுவாமி கோயிலில் ஸ்ரீ தாயுமானசுவாமி, ஸ்ரீ மட்டுவார் குழலியம்மை சந்நிதிகளில் நாள்தோறும் நெய் விளக்கு ஏற்றுவதற்கு வெள்ளியாலாகிய இரண்டு திருமுக விளக்குகளை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கி அருளுகிறார்கள். அன்று சுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் சிறப்பாக நடைபெறும்.

திருச்சிராப்பள்ளி நகரத்தந்தை டாக்டர், திரு. V. K. ரெங்கநாதன், M. B. B. S., D. M. R. அவர்களைத் தலைவராகக் கொண்டு பெருமக்களும் அன்பர்களும் சிறந்த முறையில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களை வரவேற்கவும் வழிபாடுகள் செய்யவும் மாகேசுவரபூசை நிகழ்த்தவும் விரிவான ஏற்பாடுகள் செய்துள்ளனர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருச்சிராப்பள்ளி மௌனமடத்திற்கு எழுந்தருளுவதை முன்னிட்டு ஸ்ரீதாயுமான சுவாமிகோயில் உச்சிப்பிள்ளையார்கோயில், மௌனமடம். ஸ்ரீமௌனகுருசுவாமிகள் ஸ்ரீதாயுமானசுவாமிக்கு அருளுபதேசம் வழங்குதல் ஆகியவை அடங்கிய படத்தை இவ்விதழ் அட்டையில் வெளியிட்டுமகிழ்கிறோம்.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல்
வேறொன் றறியேன் பராபரமே —தாயுமானவர்.

துறவிலும் துறவு

வாகீசகலாநிதி, செந்தமிழ்ச்செல்வர்
திரு. கி. வா. ஜகந்நாதன், M. A.

(மலர் 32, இதழ் 8, பக்கம் 425-இன் தொடர்ச்சி)

3

அந்த ஆண்டு தத்தாத்திரேய ஜயந்திக்கு இன்னும் ஒரு மாதம் இருந்தது. நிர்மலானந்தர் எங்கெங்கோ சுற்றிப் பணம் சேகரித்துக்கொண்டு வந்தார். மற்ற ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். வழக்கம்போல் ஊரிலிருந்து வந்தவர், நீராடிவிட்டுக் குருநாதருடைய முன்னிலையில் சென்று காலில் விழுந்து வணங்கித் திருநீறு வாங்கிக்கொண்டார். சுவாமிகள் அன்று சிறிதுநேரம் மௌனத்தைக் கலைத்தார்: "உன்னுடைய சம்சாரம் எந்தமட்டில் இருக்கிறது?" என்று கேட்டார்.

"அவ்விடத்துக் கருணையால் இந்த ஜயந்தி மிகச் சிறப்பாக நடைபெறும் என்று நினைக்கிறேன்" என்றார் சீடர்.

"ஒரு சந்நியாசி தன் கோவணத்தை எலி கடிக்காமல் காப்பாற்றப் பூனையை வளர்த்து, அதைக் காப்பாற்ற மாடு வளர்த்து, இப்படியே பெரிய குடும்பியான கதையைக் கேட்டிருக்கிறாயா?"

நிர்மலானந்தர் சிரித்துக்கொண்டார். "இதில் பந்தம் ஏது? ஏதோ ஜனங்கள் கூடுகிறார்கள். புண்ணியத்தைக் கட்டிக் கொண்டு போகிறார்கள்."

"அவர்கள் இங்கே விட்டுச் செல்லும் பாவத்தை யார் கட்டிக்கொள்கிறார்கள் தெரியுமா?"

"ஞானிகளுக்குப் புண்ணிய பாவ சம்பந்தம் இல்லையே!"

"ஞானிகளுக்குத்தானே? காஷாயம் தரித்த குடும்பிகளுக்கு அல்லவே!"

"அப்படியெல்லாம் உத்தரவாகக்கூடாது."

"சரி, அங்கே குடும்பியாக ஒரு குடும்பத்தில் ஈடுபட்டாய்? அந்த வாசனை உன்னை விடவில்லை. இங்கே குடும்பத்தைப் பெருக்குகிறாய்; ஈசுவர சம்மதம் எதுவோ அது நடக்கட்டும். என்று மீண்டும் மௌனியானார்.

நிர்மலானந்தர் சிறிதே அசந்துபோனார். பிறகு தைரியம் வந்துவிட்டது. 'நம் குருநாதருக்கு நம்மேல்தானே கோபம்' அதனால் வரும் பலனை நாம் அநுபவிக்கத்தயார். ஆனால்; எத்தனைபேருக்கு நன்மை! ஒருவன் தன் நன்மையைப் பலியிடுவதால், ஆயிரமாயிரம் பேர் அருள் பெறும்படி இருந்தால், அது நடக்கவேண்டியதுதான்' என்று சமாதானம் செய்து கொண்டார். முன்னையினும் அதிகமாகத் தத்தாத்திரேய ஜயந்திக்கு உரிய ஏற்பாடுகளில் ஈடுபட்டுவிட்டார்.

அந்த ஆண்டு ஊரில் நல்ல மழை. எங்கும் சுபிட்சமாக இருந்தது. இது சுவாமிகளுடைய மகிமை என்ற பேச்சு எங்கும் அடிபட்டது. நிர்மலானந்தரே அதை ஓரளவு பரப்பினார், அதனால் பண வரவும் அதிகம்; ஜன வரவும் அதிகம்.

பூஜை நடந்த பிற்பாடுதான் எல்லாருக்கும் உணவு அளிப்பார்கள். மிகவும் கட்டுப்பாடாக இத்தகைய விஷயத்தில் கவனம் செலுத்தினார்கள் வைதிகர்கள். மந்திரம் சொல்பவர்கள் காபி குடிக்கக்கூடாது. பூஜை செய்கிறவர்கள் வெறும் வயிற்றோடு இருக்கவேண்டும். யாராக இருந்தாலும் பூஜை நடந்த பிறகே உண்ணவேண்டும். தனியே சமையல் செய்து கொள்பவர்களானாலும் அந்த எல்லையில் பூஜையைப் பார்த்துவிட்டுத்தான் உண்ணவேண்டும். இப்படியெல்லாம் நிபந்தனைகளை வகுத்திருந்தார் நிர்மலானந்தர். அப்போதுதான் தெய்விக சக்தி பரவும் என்பது அவர் தீர்மானம்.

பூஜை நடந்துகொண்டிருந்தது. அபிஷேகங்கள் ஆகித் தீபாராதனை நடக்கிறது. இனிமேல் அலங்காரமாகி நைவேத்தியம் ஆன பிறகு மகாதீபாராதனை நடைபெறவேண்டும்.

அப்போது ஆலயத்தில் மடைப்பள்ளிக்கருகே ஏதோ குழப்பம் உண்டாயிற்று. கூட்டம் அந்தத்திசையில் ஓடியது. 'ஐயோ பாவம்! பிள்ளைத்தாய்ச்சி!'' என்று சிலர் சொன்னார்கள். ''நிறை மாசம்" என்று அங்கலாய்த்தார்கள்.

''என்ன, என்ன?" என்று கேட்டுக்கொண்டே, நிர்மலானந்தர் அங்கே ஓடினார். மகாதீபாராதனைக்குச் சுவாமிகளை அழைத்துவரப் போகவேண்டும் அவர். அதற்குள் இந்த ஆரவாரம்.

மடைப்பள்ளிக்கு அருகே போனார். அங்கே யாரோ ஒரு பெண்மணி – நிறைசூலி - பேச்சுமூச்சற்றுக் கிடந்தாள். கூட்டம் நெரிந்தது. அதை ஒதுக்குவது பெரும்பாடாகிவிட்டது. நிர்மலானந்தர் கூவினார்; வைதார்; ஒதுங்கிப்போகும்படி சத்தம் போட்டார். நாலைந்து பேர்கள் வந்து கூட்டத்தை விலக்கினார்கள்; கொஞ்சம் காற்று வந்தது. தண்ணீரை அந்தப் பெண்ணின் முகத்திலே தெளித்தார்கள். அவள் மெல்லக் கண்ணைத் திறந்தாள்; வாயைத் திறந்தாள்; ஏதோ சாடைகாட்டினாள். அதற்குள் நிர்மலானந்தருக்கு விஷயம்தெரிந்துவிட்டது. அவள் பசியினால் வாடிப்போனவள். அங்கே வந்தபோது, கண்ணை இருட்டியிருக்கிறது. சாதம் கேட்டிருக்கிறாள். பரிசாரகன் கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறான். மோர் கேட்டிருக்கிறாள்; அதையும் மறுத்துவிட்டான். மடார் என்று மயக்கம் போட்டு விழுந்துவிட்டாள்.

செய்தி தெரிந்தவுடன் கதிகலங்கிப்போனார் நிர்மலானந்தர். ''கொண்டுவா மோரை; கொஞ்சம் மோரில் சாதத்தைக் கரைத்துக் கொண்டுவா" என்று கத்தினார்.

''இன்னும் நைவேத்தியம் ஆகவில்லையே!" என்று பணிவாக ஒருவர் விண்ணப்பித்துக்கொண்டார்.

''நைவேத்தியமுமாயிற்று, மண்ணுமாயிற்று; இதோ இங்கேயே நைவேத்தியம் ஆகப்போகிறது; கொண்டுவா" என்று மறுபடியும் கூவினார்.

அடுத்த நிமிஷம் அவர் கேட்டவை வந்தன. ''இந்தா அம்மா, இந்த மோரைக் குடி" என்றார், அந்தப் பெண்ணிடம். அவள் மடக்குமடக்கென்று இரண்டுவாய் குடித்தாள். பிறகு எழுந்து உட்கார்ந்துகொண்டாள். கரைத்திருந்த மோர்ஞ் சாதத்தை அவள் கையில் கொடுத்தார்; அதையும் வாங்கிக் குடித்தாள் அந்தப் பெண்மணி.

"தாயே, நீ இப்படியே ஓரமாகப் படுத்துக்கொள்" என்று சொல்லும்போது, நிர்மலானந்தருக்கு நாக்குத் தழுதழுத்தது.

"சரி; நைவேத்தியம் ஆகட்டும்; பூஜையை முடியுங்கள். சுவாமிகளை நான் அழைத்துவருகிறேன். இந்த அம்மாளிடம் நாலுபேர் நில்லுங்கள். காற்று வர இடம் விடுங்கள்" என்று சொல்லிக்கொண்டே, படியிறங்கி அவர் கீழே ஓடினார்.

சுவாமிகள் மேலே வந்தார்; மகாதீபாராதனை நடைபெற்றது. மாலையில் நடக்க வேண்டியன யாவும் நடந்தன.

கூட்டத்தினர் சுவாமிக்கு நைவேத்தியம் ஆவதற்குமுன் ஒரு பெண்மணிக்குச் சாதத்தைப் போட்டதுபற்றிப் பலவாறு பேசிக்கொண்டார்கள். வைதிகர்கள் அநுசிதம் என்றார்கள். பக்தர்கள் நிர்மலானந்தருடைய கருணையைப் பாராட்டினார்கள். வேறு பலர், "இந்தச் சமயத்தில் இந்தப் பீடை எங்கே வந்தது?" என்று அந்தப் பெண்மணியை வைதார்கள்.

அன்று உற்சவம் முடிய விடியற்காலம் மூன்றுமணி ஆயிற்று. மறுநாள் நிர்மலானந்தர் கையோடு கையாக அனுப்பவேண்டியவர்களையெல்லாம் விரைவாக அனுப்பினார். எந்த ஆண்டும் இவ்வளவு விரைவில் அப்படிச் செய்ததில்லை.

மாலை நேரம் வந்தது. அவர் கிணற்றுக்குச்சென்று நீராடினார். திருநீற்றை உடம்பெல்லாம் பூசிக்கொண்டு குருநாதரிடம் வந்தார். வந்து கீழே விழுந்து பணிந்தவர், எழாமல் விம்மி விம்மி அழுதார். சுவாமிகள் கைச்சாடையால் என்ன என்று கேட்டதை, அவர் அறியவில்லை. அங்கே இருந்த சங்கரானந்தர், "எழுந்திரும் சுவாமி, குருநாதர் எழுந்திருக்கச் சொல்கிறார்" என்றார்.

மெல்ல எழுந்தார் அவர். இன்னும் அழுகை ஓயவில்லை. குருநாதர் புன்முறுவல் பூத்தபடியே, அவர்மேல் பார்வையை ஓட்டினார். "ஏன்?" என்று கையால் சைகை செய்தார்.

"எனக்குப் புத்தி வந்தது. அந்தக் குடும்பத்திலே நடந்ததுபோல இங்கும் நடந்துவிட்டது. நான் இனி உள்ளம் தூய்மை பெறாமல், இந்தச் சந்நிதானத்தில் நிற்கக்கூடாது. குருநாதருடைய வாக்கை அலட்சியம்செய்த பாவியாகிவிட்டேன். அதற்குப் பிராயச்சித்தம் செய்யாமல் இங்கே ஒரு கணமும் இருக்கக்கூடாது என்று என் உள்ளம் கூறுகிறது. எங்கேயாவது

போய் உலகத்தையே மறந்து தனிமையில் இருந்துவிட்டு, இவ் விடத்துக் கிருபை என்னை அழைக்கும்போது வருகிறேன். இனியும் வியாபகமும் குடும்ப வாசனையும் இல்லாமல், கொண்ட கோலத்துக்கு ஏற்றபடி நடந்து, அடையவேண்டியதை அடையும்படி இந்த அல்பனுக்குத் திருவருள் பாலிக்கவேண்டும்" என்று கதறினர் சீடர். சுவாமிகள் புன்முறுவல் பூத்தபடியே அமைதியாகக் கேட்டார். கையை அமர்த்தினர். பிறகு தலையை அசைத்தார்.

அங்கே சங்கரானந்தரும் மற்ெருரு சீடராகிய சிவானந்தரும் நின்றுகொண்டிருந்தார்கள்.

மறுபடியும் கீழே விழுந்து பணிந்தார் நிர்மலானந்தர். குருநாதர் தந்த திருநீற்றை வாங்கி அணிந்துகொண்டார். அப்போது குருநாதர் மௌனத்தைக் கலைத்தார்.

"அப்பா! இன்றுதான் நீ உண்மைத் துறவி ஆனய் இனி எனக்கு மௌனம் வேண்டாம். நீ அதை மேற்கொள். போய் வா" என்று அருள் சுரந்து விடைகொடுத்தார் அந்த மகாஞானி.

கையைக் குவித்துக்கொண்டு, திரும்பாமலே அப்படியே பின்னல் நகர்ந்து வாசல்படிவரை வந்த நிர்மலானந்தர், குருநாதர் கட்டளையிட்டபடி மோனம் பூண்டுவிட்டார். தம் தோழர் இருவரையும் கையெடுத்துக் கும்பிட்டார். மெல்ல மெல்ல நிலவுலகைப் போர்த்துக்கொண்டு பரவிய இருளூடே அவர் ஒளியைக் காணப் புறப்பட்டுவிட்டார்.

சிவானந்தர் சங்கரானந்தரிடம் கேட்டார்: "அந்தக் குடும்பத்திலே நடந்ததுபோல இங்கும் நடந்துவிட்டது என்றீரே அவர், அது என்ன?"

"அது பழைய கதை; அவருடைய பூர்வாசிரமக் கதை" என்றார் சங்கரானந்தர்.

"அதைத் தெரிந்துகொள்ளலாமோ?"

அவர் தெரிந்துகொண்ட கதை இதுதான்.

❋

நிர்மலானந்தர் ஆவதற்குமுன் அவர் குப்புசாமி என்று முன்பே நமக்குத் தெரியும் அல்லவா? அவர் இல்வாழ்வில்

வாழ்ந்தபோது, அவர் மனைவிக்கும் அவருக்கும் அவ்வளவு போதாது. அவள் கெட்டவள் அல்ல; முரட்டுப் பிடிவாதம். ஏழைகளுக்கு இரங்கமாட்டாள்; சக்கரைப்பொங்கல் நிவேதனம் பண்ணி, அயல் வீட்டுக்காரருக்குக் கொண்டுபோய்க் கொடுப்பாள்.

ஒரு வெள்ளிக்கிழமையன்று அவள் மங்கலியப் பெண்களுக்கு ஆராதனை செய்தாள். சில சுமங்கலிகளை அழைத்து உணவு போட்டாள். அந்த ஆராதனையில் வரித்த பெண்மணிகள் உண்டபின்பே ஆடவர்கள் உண்பார்கள். அன்று மங்கலியப் பெண்டுகள் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்.

அப்போது வாசலில் யாரோ பிச்சைக்காரிவந்து, "அம்மா, சோறு!" என்று கத்தினாள். அவள் பக்கத்தில் இரண்டுமாத நோஞ்சான் குழந்தை ஒன்று நின்றுகொண்டிருந்தது. வயிற்றில் இன்றோ நாளையோ உதயமாகப்போகிற குழந்தை இருந்தது. அவள் உணவு கண்டு எவ்வளவு நாளாயிற்றோ, ஆண்டவனே அறிவான்!

வாசலில் அவள் கத்தினபோது அவள் பிராணனைக் கண்ணில் வைத்துக் கொண்டிருந்தாள். அவளைக் குப்புசாமி பார்த்தார். உள்ளே போய்த் தம் மனைவியிடம் ஏதாவது அவளுக்குப் போடச்சொன்னார்.

"இதென்ன? பூஜைவேளையில் கரடிவிட்டு ஓட்டினாற்போல்" என்று கடிந்துகொண்டாள் அவள்.

"பழையதாவது போடு" என்று சொல்லிப்பார்த்தார்.

"அதெல்லாம் இப்போது தொடமுடியாது; வேறு எங்கேயாவது தொலையச்சொல்லுங்கள்" என்றாள் அம்மாள்.

"பிராணன் போய்விடும்போல இருக்கிறது" என்று கெஞ்சினார் அவர்.

"இங்கே என் பிராணனை ஏன் வாங்குகிறீர்கள்?" என்று அவள் இரைந்தாள்.

அங்கே வைத்திருந்த வாழைப்பழத்தை எடுத்துக்கொண்டு வாசலுக்கு ஓடினார். அவர்பிறகே அந்த அம்மாள் ஓடிவந்தாள்.

அவர் வாசலுக்கு வந்தபோது அந்த அம்மாள் அவர் கையிலிருந்த பழத்தை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டாள். அதே சமயத்தில் அங்கே நின்ற பிச்சைக்காரி. தடாலென்று கீழே விழுந்துவிட்டாள்.

அம்மாள், "அட கண்ணராவியே!" என்று சொல்லித் தன் கணவரையும் வெளியே நிற்கவிட்டுக் கதவைப் படாரென்று சார்த்திக்கொண்டு போய்விட்டாள்.

கணநேரம் குப்புசாமி திகைத்தார், பிறகு அடுத்தவீட்டுக்கு ஓடினர். தண்ணீரும் சோறும் வாங்கிவந்தார். பிச்சைக்காரியின் முகத்தில் தண்ணீரைத் தெளித்தார். கண்ணைத் திறந்தவுடன் வாயில் சிறிது ஊற்றினர். மெல்லக் கைகொடுத்து எழுப்பிவிட்டார். சோற்றைப் பிசைந்து வாயில் ஊட்டினர், அவள் அதை உண்டாள்.

"எழுந்திரம்மா, போகலாம்" என்ருர் அவர்.

பிச்சைக்காரிக்கு ஒன்றும் புரியவில்லை. "எங்கே சாமி?" என்று கேட்டாள்.

"உனக்குச் சௌகரியமான இடத்துக்கு" என்ருர். அவள் நம்பிக்கையோடு அவரைப் பின்தொடர்ந்தாள். அவளை ஓர் ஆஸ்பத்திரியில் விட்டுவிட்டு, அவர் தம் மனத்துக்குச் சாந்தி தேடி அப்படியே புறப்பட்டுவிட்டார்.

"அன்று ஒரு நிறைமாசக் கர்ப்பிணி அவர் துறவுகொள்ளக் காரணமானள். அவர் இங்கே வந்து பெரிய குடும்பத்தைச் சேர்த்தார் என்று குருநாதர் கூறுவார் அல்லவா? இந்தக் குடும்பத்திலும் விரக்தி உண்டாகும்படி இந்தக் கர்ப்பிணி செய்துவிட்டாள். 'அங்கே பட்டதுபோல இங்கேயும் பட்டபோதுதான்'. அவருக்குக் குருநாதருடைய உபதேசம் விளங்கியது" என்று சங்கரானந்தர் சொல்லிப் பெருமூச்சுவிட்டார்.

துறவிலும் துறவு பூண்ட நிர்மலானந்தர், ஏதும் பேசாத மோனத்தையும், யாரும் காணுத தனிமையையும், எந்தச்செயலும் இழந்த நிலையையும் நாடிப் போய்க்கொண்டிருந்தார்.

திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

மூலமும் - உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்

திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை

(மலர் 32. இதழ் 8. பக்கம் 418 இன் தொடர்ச்சி)

68. மான்மறி மழுவார் செங்கை வள்ளலே! நிலவுகக்குங்
கூன்மதிக் குழவி வேய்ந்த கோடீர! தவறற் றோர்க்குத்
தேன்மலி சுவைபோ லார்ந்த சிற்சுகந் தருமை யாறு!
யான்மிக மிடியால் நொந்தேன் இரங்கியெற் கருளு
[வாயே.

சொ - ள். மான் மறி மழு ஆர் செம் கை வள்ளல் ஏ - மான்கன்றும் மழுப்படையும் தாங்கிய அரிய செவந்த திருக் கரங்களை யுடைய வள்ளல் பெருமானே! (செல்வரே), நிலவு கக்கும் கூன்மதி குழவி வேய்ந்த கோடீர! - நிலவினை வீசும் வளைந்த பிறைச்சந்திரனை யணிந்த செஞ்சடைத் தேவரே!' தவறு அற்றோர்க்கு - இருவகைக் குற்றங்களும் இயல்பாய் நீங்கினவர்க்கு, தேன்மலி சுவைபோல் ஆர்ந்த - தேனினும் நிறைந்த இனிய சுவையினைப்போல் மலிந்த, சித்சுகம்தரும் ஐயாறு! - ஞானக்கடலாகிய நலனைக் கொடுத்தருளும் திருவை யாற்றுப் பெருமானே! மிடியால் யான்மிக நொந்தேன் - அடிய னேன் வறுமைப்பிணியால் மிகவும் நோவுற்றுளேன், இரங்கி எற்கு அருளுவாய்-எளியவனுக்கு இரங்கித் திருவருள் புரிவீராக; (எ - று).

(கு - ரை) மான் மறி - மான்கன்று. (அநுக்கிரகம்) அருள் புரியும் கைகளாகலின் செங்கை என்றார். நிலவு கக்கும் - நிலவினை வீசும். கூன்மதிக் குழவி - பிறைத்திங்கள். கூன் - வளைவு. மாகேசுவர வடிவங்களில் முதலாய் வீடுபேற்றினை யருளுவதா யுள்ள மூர்த்தமே சந்திரசேகர வடிவமாம். கோடீரம் - சடை. "செஞ்சடைக் கற்றைமுற்றத்திகழ்நிலா வெறிக்குஞ்சென்னி, நஞ்சடைக் கண்டனார்" என்னும் திருநேரிசையினைப் பின் பற்றியது. தவறு - பிழை. ஆர்ந்த - நிறைந்த. சித் சுகம் - சிற் சுகம் எனவாயிற்று; ஞான நலம் என்னும் பொருளது.

மிடி - வறுமை. நொந்தேன் - மிகவும் வருந்தினேன். அருளு வாய் - அருள் புரிவாய்.

69. அருமறைப் பொருளே யாரா வமுதே மரை விரிஞ்சன்
திருமரு மார்பன் தேடும் செழுஞ்சுடர்ப் பிழம்பே [இன்பக்
கருணையங் கடலே நின்பொற் கழலிணை வழுத்த [நாயேன்
இருள்கெட அருள்ஐ யாற்றெம் இறைவ ஐம் முகத்து [வாழ்வே.

சொ - ள். அரும்மறைப் பொருள் ஏ - வேதங்களின் அரிய உட்பொருளானவரே, ஆரா (த) அமுதமே - தணிவு இலாத பிறர் அருந்தமுடியாத அமிழ்தமயமானவரே, மரைவிரிஞ்சன் திருமரு மார்பன்தேடும் செழும்சுடர் பிழம்பு ஏ - தாமரை மலரில் தங்கிய பிரமதேவரும் இலட்சுமி தேவியார் உறையும் திருமாலும் திருவடி திருமுடிகளைத் தேடி யறியாத செழித்த அனல்உரு வானவரே (இலிங்கோற்பவ வுருவம்). இன்பம் கருணை அம் கடலே - இன்ப வடிவாகிய அருட்கடல் வடிவானவரே, ஐம் முகத்து வாழ்வு ஏ - ஐந்து திருமுகங்களையுடைய பெருவாழ்வாம் கடவுளே, ஐயாற்று எம்இறைவ - திருவையாற்றில் எழுந்தருளிய எம்முடைய இறைவரே, நின்பொன் கழல்இணை வழுத்த நாயேன் இருள்கெட அருள்-தேவரீருடைய அழகிய திருவடிகளைப் போற்ற நாயினேனுடைய அறியாமையாகிய பேர் இருள் கெடுமாறு திருவருள் புரிவீராக. (எ - று).

(கு - ரை) மரை - முதற்குறை; தாமரை என்பது பொருள்; முதலாகு பெயர். விரிஞ்சன் - பிரமன். "பூமேவு செங்கமலப் புத்தேளும்" என்பது கந்தர்கலிவெண்பா. (திருமருவிய மார்பன்) திருமரு மார்பன் - திருமால்; திருவினையுடைய திருமால் என வந்தது. பிழம்பு - திரண்டது. இருள் - அறியாமை. ஐம்முகம் - ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம் என்பன. நேபாளமென்னும் பகுதியில் இங்ஙனம் ஐம்முகங்களுடன் தோன்றி யருளுகின்றார். வாழ்வு - வளம் (செல்வம்) ஈசானாதி ஐம்முகங்களின்றும் தோன்றியனவே மூலாகமமும் உபாகமமும் என்பர். இவ்வைம்முகங்களின் வழியே முப்போதுந் திருமேனி தீண்டுவாராகிய ஆதிசைவர்கள் (மறையவர்கள்) தோன்றினரென்பர். கருணையங் கடல் - கிருபாசமுத்திரம்.

" ஆலும் மறை சூழ் கயிலை யின்கண் அருள் செய்த
சாலு மொழியால் வழிதடுத் தடிமை கொள்வான்
மேலுற எழுந்துமிகு கீழுற வகழ்ந்து
மாலும் அயனுக்கும் அரியார் ஒருவர் வந்தார் "

என்பது " திருத்தொண்டர் புராணம் ". இருவரும் அடி முடி தேடிய வரலாறு வகுத்துரைக்கப் படுகின்றது.

(யமகம்)

70. முகமனங் குவளை யுண்டோன் மொழியவூர்ந்தருளும் [பஞ்ச
முகமனங் குவளை தம்மான் முன்ன நோக்க ரியவாக
முகமனங் குவளை சூடு முன்னவா சிறியேற்காக
முகமனங் குவளை யார மொய்க்கு மையாற்று ளானே.

சொ - ள். அங்கு - அழல் பிழம்பு ஆன அவ்விடத்தில், பஞ்ச முகம் மன் - ஐம்முகங்களையுடைய பிரமதேவனும் (சதுர் முகனனது ஒருகாலத்தில்), வளைதம்மான் - சக்கராயுதத்தினை உடைய திருமாலும் (வளை - சங்கம்), (அன்னமும் கேழலுமாக உரு வெடுத்து) முன்னம் - கருதற்கும், நோக்கு - காண்டற்கும், அரியவா - அடிமுடி தேடி யறியப்படாதவாறே, கம்முகம் - திரு முடியினிடத்து, அம் - அழகிய, குவளை சூடும் - குவளைப் பூவினைச் சூடும், முன்னவா - எப்பொருட்கும் முன்னுயவனே (முதல்வரே) கமுகம் - கமுக மரத்தினிடத்து, அன்னம் - அன்னப்பறவையை யும். குவளை - மிக வளைவுற்ற சங்கினங்களும், ஆர - நிறைய (மிகுதியாக), மொய்க்கும் - மொய்த்துக் கொண்டிருக்கின்ற, ஐயாற்றுளான் ஏ - திருவையாற்றில் விரும்பி யெழுந்தருளி யிருப் பவரே. சிறியேற்கு ஆக சிறுமையுடைய எளியேன் பொருட்டு ஆக, அ (க) ம் கு அளை உண்டோன் முகமன் மொழிய - இட மகன்ற பூமியினையும் தயிரினையும் உண்டிட்ட திருமாலும் போற்று தல் புகல அத்திருமாலையே ஊர்தியாகக் கொண்டு, ஊர்ந்து அருளும் - எழுந்தருளிச் செய்தல் வேண்டும். (எ - று).

(கு - ரை) பிரமன் ஐம்முகங்களுள் ஒன்று குறைவுற்ற வரலாறு :- இறைவன் வைரவக்கடவுளை யேவி ஒரு முகத்தினைக் கிள்ளுமாறு செய்தனர். " பூமன் சிரங்கண்டி " என்பதனல் அறியக்கிடக்கும். அட்ட விரட்டத் தலங்களுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுவது. சிரங்கொய்யப்படுவதற்கு முன்னர் ஐம்முகன் எனப் பெற்ற பிரமனே பின்னர் சதுர்முகன் எனப்

பெயர்பெற்றனர் போலும். முகமன் - உபசாரமொழி. தம்மான் - தலைவன். முன்னம் - கருதுதல். சிறியேன் - சிறுமையுடையேன். "அருமையானவன்" என்பார் "அரியவா" என விளித்தனர். அன்னமும் வளையும் நீர்வாழ்வன. இப்பாடல் ஒரெதுகையாலான யமகச் செய்யுளாம். ஆர்தல் - நிறைதல். ஏகாரம் - அசைநிலை. மொய்த்தல் - நெருங்கல். உள்ளான் - உளான் என இடைக்குறையாயது.

கலிநிலைத்துறை

71. ஆற்றல் சான்றவை யாற்றிறை வாவுன தடியைப்
போற்ற வன்பிலன் துயரெலா நின்னுழைப் புனிதா!
சாற்ற எண்ணிடி லொன்று தோன் றுவதில்லை தறு
[கண்
சீற்ற வெம்புலி யுடையுளாய் சிறியனென் செய்வேன்.

(இ - ள்) தறுகண் சீற்றம் வெம்புலி உடைஉளாய் - அஞ்சாமையும் சினமும் இயல்பாயமைந்த கொடிய புலித்தோலினை யாடையாக உள்ளவரே! புனிதா - தூய்மையானவரே, ஆற்றல் சான்ற ஐயாற்று இறைவா! - ஐந்தொழில் புரிந்தருளும் திருவையாற்றுப் பெரும் பதியில் எழுந்தருளி யிருக்குந் தலைவரே! உனது அடியைப் போற்ற அன்பு இலன் - தேவரீருடைய திருவடிகளைத் துதித்தற்குச் சிறிதும் அன்பு இல்லாதவன், நின் உழைதுயர் எல்லாம் சாற்ற எண்ணிடில் ஒன்று தோன்றுவது இ(ல்)லை - தேவரீர் இடத்து அடியேனுக்குற்ற இடர்கள் அனைத்தையும் கூற எண்ணிடில் (கருதினால்) சிறிதும் புலப்பட இல்லை, சிறியேன் என் செய்வேன் - அறிவிலே மிகவும் சிறியவனாகிய எளியேன் யாது செய்வேன் (எ-று).

(கு - ரை) ஆற்றல் - வலிமை. தறுகண் - அஞ்சாமை. துயர் - பிறவிப் பெருந்துயர். துயர் - துன்பம்; பிறப்பு இறப்பு துன்பம். "வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை யில" என்னும் திருக்குறட் பாவிற்கு தன்னைப்பற்றியும் பிற உயிரைப்பற்றியும் ஊழைப்பற்றியும் வருவனவாம் துன்பங்கள் என்பார். ஆதியாத்மிகம், ஆதி தெய்விகம் என்றுரைப்பது வடமொழி வழக்கு. நின் உழை - தேவரீரிடத்து. உழை - ஏழனுருபு. சாற்றல் - விண்ணப்பித்துரைத்தல். புனிதம் - தூய்மை. எண்ணிடில் - கருதினால். தோன்றுவது இல்லை - புலப்படுவது இல்லை. ஒன்று (ம்) - சிறிதும். சீற்றம் - சீறுதல் (கோபம்).

வெம்மை புலி - வெப்புலி. உடை - ஆடை. செய்வேன் தன்மை யொருமை வினைமுற்று. என் - (எவன்) யாது? வினை வினைக் குறிப்பு முற்று.

72. செய்யு நற்றவ மளியற மறிவொடு தெளிவு
மெய்யு மின்றியே யரிமதர் நெடுங்கணார் விழைவும்
பொய்யு மேயுளன் எனவெனைப் புறம்விடேல் புரங்கள்
வெய்ய தீப்பட நகைத்தஐ யாற்றொளிர் விமலா !

சொ - ள். புரங்கள் வெய்ய தீ (ப்) பட நகைத்த ஐயாற்று ஒளிர் விமலா ! - திரிபுரங்களாகிய முப்புரங்கள் கொடிய தீயினால் அழியுமாறு சிரித்தருளிய திருவையாற்றுப் பெருமானே ! (செம்பொற்சோதியாய்விளங்குகின்ற அழுக்கற்ற தூய ஆண்டவனே!) செய்யும் நல் தவம் - நோன்பு நோற்று ஆற்றுகின்ற நல்ல தவங்களும், அளி - அன்பும், அறம் - அறச்செயலும், அறிவு ஒடு தெளிவும் மெய்யும் இன்றி (ஏ) - சிவஞானத்தொடு பொருந்திய தெளிவும் வாய்மையும் இல்லாமல், (தெருட்சியும்) அரி மதர் நெடும் கண்ணார் - (செவந்த) இரேகைகள் பொருந்திய செழித்த நீண்ட கண்களையுடைய இளமையான பெண்களுடைய, விழைவும் பொய்யும் ஏ உளன் என - விருப்பத்தினையும் பொய்மையும் ஏ உள்ளவன் இவன் என்று, என்னை - அடியவனை, புறம் விடேல் வெளியில் புகவிடாதருள்க. புறத்தில் விடாதபடி அணைத்தருள்க வென்பதாம் (எ - று).

(கு - ரை) தவம் முதலியவற்றின் இயல்கள் ஆவன :- விரதங்களால் உண்டி சுருக்கல் ஐம்பெருங் குற்றங்கள் வராதபடி, அனுகாதபடி, ஆற்றுபடி, நியமத்தோடு இருத்தல் முதலியனவாம். நல்லன தரும் தவமே நற்றவமாம் என்றபடி. பிறவிப் பிணியைப் பொறுத்துத்தவமியற்றின் வீட்டின்பம் தரும் ஆகலின் நல்லன தரும் தவம் என்றார். அளி - அன்பு. அறிவு - மெய்யறிவு (ஞானம்). தெளிவு - உண்மையைத் தெரிதல். அரி - செவ்வரி கருவரி (இரேகை). நெடும் கண்ணார் என்பது நெடுங்கணார் என இடைக்குறைந்தது. காமங்காரணமாகப் பொய், கரவு, களவு முதலியன புரிதல் இயல்பாகலின் பொய்ம்மையே எனக் கூறினர். புறம் - நம் இனத்தவன் அல்லன் என புறத்தவன் என விடலைப் புறம் எனப் பட்டது. விடேல் - விட்டுவிடக் கூடாது ஆட்கொள்ளல் வேண்டும் என்பதாம். புரம் - முப்புரம். நகைத்த - சிரித்த. தீப்பட - எரிந்து சம்பராம்படி. விமலா - தூய்மையானவரே.

(தொடரும்)

சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னகரம்

சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 32. இதழ் 8. பக்கம் 431 இன் தொடர்ச்சி)

ஹௌத்ரீ தீக்ஷை, ஞானவதி கிரியாவதி என இருவகைப் படும். இவ்வாறுள்ள இவ்விரண்டும் நிர்பீஜ தீக்ஷை, சபீச தீக்ஷை என வெவ்வேறிருவகைப்படும். அவற்றுள் நிர்பீஜ தீக்ஷையாவது மலபரிபாகமுடையவராகிய வழியும் தீக்ஷைக்குப் பின் ஒருதலையான் வழுவின்றி அனுஷ்டிக்கக்கடவனுகிய சமயாசாரங்களை அனுஷ்டிக்கும் ஆற்றலும் அறிவும் இலராயினுருக்கு மற்றய கருமங்களோடுகூடச் சமயாசாரத்தையும் ஆகுதியாற் சுத்திசெய்து ஒழித்து நித்திய கரும மாத்திரையில் இயன்றமட்டும் அதிகாரமுடையவராகச் செய்தலாம். ஆயினும் சமயாசாரங்களைச் சுத்திசெய்தொழித்தமையின் நைமித்திகத்தினும் காமியத்தினும் அதிகாரங்கெடாமையால் இது நிரதிகார தீக்ஷை எனவும் பெயர்பெறும்.

இதுதான் சமயம் விசேஷம் நிர்வாணம் என மூவகைப் படும்.

அவற்றுள் சமயமும் விசேஷமும் ஒரோவொன்றேயாம். மற்றை நிர்வாண தீக்ஷை அசத்தியோ நிர்வாணம் என்றும் சத்யோ நிர்வாணமென்றும் இருவகைப்படும்.

அசத்யோநிர்வாணம் தேஹாந்தத்தில் முக்தியைப் பயப்பது. சத்தியோ நிர்வாணம் என்பது அப்பொழுதே முக்தியைக் கொடுப்பது, சமயாசார சுத்தியோடு செய்யப்படும் நிருவாண தீக்ஷையும் அதற்கு அங்கமாயும் சுதந்திரமாயும் செய்யப்படும் சமயவிசேஷங்களும் நிர்பீஜ தீக்ஷை எனக் கொள்க.

சபீஜ தீக்ஷையாவது மலபரிபாகத்தோடுகூட கற்றறிவும் ஆற்றலும் மிக்குடையராயினுருக்குச் சமயாசார கன்மமாத்திரம் நிறுத்தி மற்றைக் கன்மமெல்லாஞ் சுத்திசெய்தொழித்து

நித்தியகன்ம முதலிய மூன்றினும் பேரதிகாரமுடையவராகச் செய்வதாம். ஆதலில் இது சாதிகார தீக்ஷையெனவும் பெயர் பெறும். இத் தீக்ஷைப் பேருடையார் தீக்ஷை வேறுபாட்டால் சாதகரும், ஆசாரியருமென்று இருதிறப்படுவர். இந்த சபீஜ தீக்ஷைதான் லோகதருமிணியும் சிவதருமிணியும் என்று இருவகைப்படும். லோக தருமிணியாவது போக காமிகட்குத் திரோதான சத்திரூபமாகிய சிகாச்சேதமின்றிச் செய்வது. சிவதருமிணியாவது முக்திகாமிகளுக்குத் திரோதான சத்தி ரூபமாகிய சிகாச்சேதத்தோடு செய்வது. சமயாசார சுத்தி யின்றிச் செய்யப்படும் நிருவாண தீக்ஷையும் அதற்கு அங்க மாய்ச் செய்யப்படும் சமயவிசேஷங்களும் சபீஜ தீக்ஷையெனக் கொள்க.

ஹளத்ரீ தீக்ஷை அருகரல்லாதவருக்கு அவரவர் பக்குவத் திற்கு ஏற்ப, நயன தீக்ஷையினாலும், பரிச தீக்ஷையினாலும், வாசிக தீக்ஷையினாலும், மானஸ தீக்ஷையினாலும், சாத்திர தீக்ஷையினாலும், யோக தீக்ஷையினாலும் பாசத்தை நீக்கத் தக்கது.

இவற்றுள் நயன தீக்ஷையாவது:- கருட பாவனை கைவந் தவன் பாம்பினாலே கடிபட்டவனைப் பாம்பாகவும் தான் கருட னாகவும் பாவித்து, பார்த்து விஷந்தீர்த்தல்போல ஆசாரியர் சிஷ்யனைச் சிவபாவனையினாலே பார்த்துப் பாச விமோசனஞ் செய்தலாம்.

பரிச தீக்ஷையாவது:- பரிசவேதியினால் தாமிராதி லோகங்களினது களிம்புநீங்கி சுவர்ணமாவதுபோல, ஆசாரி யர் தமது வலக்கரத்தில் சிவனை ஆஸனமூர்த்தி மூலம் வித்யா தேஹம், பஞ்சப்பிரம ஷடங்க மூலமந்திரங்களினால் புஷ்பங் கொண்டு பூஜித்து சிஷ்யனுடைய தலையிலே வைத்து அவ னுடைய பாசத்திரயத்தை நீக்கிச் சிவமாம்படி பண்ணுவதாம்.

வாசிக தீக்ஷையாவது:- வருணாசிரமானுகுணமாக பஞ்சா க்ஷரத்தை உபதேசிப்பதாம்.

மானத தீக்ஷையாவது:- ஆசாரியன் தம்முடைய ரேசக வாயுவினால் புறப்பட்டு சிஷ்யனுடைய பூரக வாயுவினாலே இருதயத்திலே பிரவேசித்து, சிஷ்ய சைதன்யத்தை வாங்கித்

துவாதசாந்தமளவுங் கொண்டுபோய்த் தம்முடைய இருதயத்திலே சிவசைதன்யத்துடனே கலந்து, உப்பும் அப்பும் கலந்து ஏகரஸமானதுபோற் பாவித்து சிஷ்ய சைதன்யத்தை சிஷ்ய தேஹத்திலே பிரதிஷ்டை செய்தலாம்.

சாத்திர தீக்ஷையாவது :- சாஸ்திரார்த்தங்களையெல்லாம் சங்கிரகித்து பதிபாசத்தினுடைய லக்ஷணங்களையும் சிவ சீவர்களுடைய ஐக்கியத்தையும் சத்சம்பிரதாயமாகப் போதிப்பதாம்.

யோக தீக்ஷையாவது :- நிராதார சிவலோகத்தை அப்பியாஸம் பண்ணிவிப்பதாம். இவ்வறுவகை தீக்ஷயும் அவுத்திரி தீக்ஷைக்கு அருகரல்லாதவர்களுக்குப் பண்ணப்படுவனவெனவும் அறிக

இதல்லாமல் சாம்பவிதீக்ஷை என்பதுமொன்று. ஆசாரியன் திருநோக்கு முதலியவற்ருல் மாணுக்கனது பாசத்தைச் சோதிக்கையம். இந்த சாம்பவிதீக்ஷை விக்ஞானதீக்ஷை என்பதும் ஒன்று. ஆனுல் ஞானதீக்ஷை சிற்சத்தி சகிதமான மனேபாவனையினுலே பண்ணுவது, சாம்பவி கேவல சிற்சத்தி மாத்திரத்தினுலே பண்ணுவதாம்.

தீக்ஷையில் சிவபெருமான், மண்டலம், கும்பம், அக்னி, ஆசாரியன், சிஷ்யன் என்னும் ஐந்து இடங்களில் நின்று அருள்செய்வார்.

ஆசாரியாபிஷேகம் :

சமயவிசேஷ நிர்வாணதீக்ஷையானவுடன் ஆசாரியாபிஷேகம், அஸ்திராபிஷேகம் செய்துகொண்டு ஆசாரியத் தன்மையடைந்தால் ஆன்மார்த்தபூஜை பரார்த்தபூஜையைச் செய்யத் தகுதியுள்ளவனுக ஆதிசைவன் ஆகிருன். மற்றவர்கள் ஆசாரியாபிஷேகம் செய்துகொண்டால் ஆன்மார்த்த பூஜையுடன் தன்தனது சிஷ்யர்களுக்கு உபதேஷ்டாவாக ஆகிருர்கள்.

நான்கு வருணத்தவர்களும் ஆசாரியாபிஷேகம் செய்துகொள்ளலாம். ஆனுல் பரார்த்த ஆலயபூஜை செய்வதற்கு ஆதிசைவரே தகுதியுள்ளவர். மற்றவர் பரார்த்த ஆலய பூஜை செய்தால் குற்றம். நாடு அழியும். — சகலாகமம்.

சமயோபதேசம் :

சிவனையும், சிவசாஸ்திரங்களையும், சிவாக்னியையும், சாதகனையும் ஆசாரியனையும் நிந்திக்காதே. சிவனுடைய லிங்கச்சாயையைத் தூண்டாதே, நிர்மால்யபோஜனம், நிர்மால்யதானம், நிர்மால்யத்தைத் தாண்டுதல் கூடாது. சூதிகான்னம், ப்ரேதகான்னம் உண்ணாதே. புஷ்பவதிக்குப் போட்ட மீதி யன்னம் புசிக்காதே.

அஹிம்சை, சத்யம், கோபமின்மை, திருடாமை, ப்ரும்ம சர்யம், கலுஷமின்மை, குருசிச்ருஷா, சுசி, சந்தோஷம், நேர்மை, இவைகளைப் பரிபாலனம் செய்யவேண்டும். இவைகளால் புக்தி முக்தி இரண்டும் கிடைக்கும்.

நிர்மால்யம் என்பது சண்டிகேசருக்கு அர்ப்பிதமானது அதைத்தான் கொள்ளக்கூடாது. மற்றும்,

स्वेष्टलिङ्गे च यद्दत्तं चरुवत्तन्नसंशयः ।
नैवेद्यं भ्रातृपुत्राणां भगिनीनां च दापयेत् ॥

— कामिकम्

இஷ்டலிங்கத்திற்கு நிவேதனம் செய்த அன்னம் முதலானது சரு போன்றது; ஆதலால் அதை சஹோதரன், புத்ரன், சஹோதரி இவர்களுக்குக் கொடுக்கவும். — காமிகாகமம்

पत्रं पुष्पं फलं तोयमन्नपानद्य मौषधम् ।
अनिवेद्य नभुंजीत भगवन्तं सदाशिवम् ॥

— सिद्धान्तशेखरे

பத்ரம், புஷ்பம், பழம், ஜலம், அன்னம், பானம் மருந்து இவையாவற்றையும் சிவனுக்கு நிவேதனம் செய்து அருந்தவேண்டும். — சேகரம்

देवस्वं देवताद्रव्यं नैवेद्यं च निवेदितम् ।
चण्डद्रव्यं बहिः क्षिप्तं निर्माल्यं षड्विधं भवेत् ॥

தேவஸ்வம் சுவாமிக்கு விடப்பட்ட க்ராமம், நிலம் முதலானவை தேவத்திரவியம். இறைவனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட வஸ்திரம், ஆபரணம் முதலானவை. இறைவனுக்கு நிவேதனம் செய்யப் பாகம் செய்யப்பட்டவை. இறைவனுக்கு நிவேதனம் செய்தவை. சண்டீசனுக்கு நிவேதனம் செய்தது என்று நிர்மால்யம் ஆறுவகையாகும். (தொடரும்)

"கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்"

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 32. இதழ் 8. பக்கம் 412 இன் தொடர்ச்சி)

64. வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்தது

சென்னியில் வெண்திங்கள் சூடிய மதுரைப் பெருமானின் அருள்பெற்ற திருஞானசம்பந்தர் துன்னிருள் வடிவம்பெற்ற அமணரைக் கழுவேற்றிய துணிவுரைத்தாம். இனி வணிக மகளொருத்திக்காக வன்னிமுதல் மூன்றையும் வரவழைத்த விமலனின் விளையாடலைக் காண்போம்.

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த வணிகனொருவன் அளவற்ற செல்வங்கள் பெற்றிருந்தும் மழலைச் செல்வமின்றிப் பலகால் வருந்திக் கடைசியில் தன்காதல் மனைவியோடு அறம் பல செய்த தன் பலனாக அழகிய ஓர் பெண்மகவைப் பெற்றெடுத்தான். சில ஆண்டுகளுக்குப் பிறகு தன் மருகனாகி மதுரையில் வாழும் வணிகனுக்கு (அவன் இதற்கு முன்பே மணம் முடிக்கப்பெற்ற வன்) தன் வித்தகமயிலைக் கடிமணமியற்ற உறுதிசெய்து அதனைப் பலரும் கேட்கச் சொல்லிக்கொண்டிருந்தான்.

ஊழ்வினையால் வணிகன் இறக்கவே - அவன்காதல் மனைவி தானும் அவனோடு தன்னுயிரைப் போக்கிக்கொண்டாள். உற வினர்கள் பலருங்கூடி அவனுக்குச் செய்யவேண்டிய கடன்களைச் செய்தபின், விபரங்களை ஏட்டில் எழுதி மதுரையிலிருக்கும் வணி கனுக்கு அனுப்பினர்கள்.

'மாமனும் மாமியும் இறந்தனர். அவர்களுடைய அளவற்ற திரவியங்களோடு அவர்களுடைய ஒரே பெண்ணையும் கைக் கொள்க' என்றெழுதப்பட்ட வாசகம் கண்டான். வியப்பும் வேதனையும் கொண்டான்; அழுதுபுரண்டெழுந்து கிளைஞர் தேற்றத் தெளிந்து காவிரிப்பூம்பட்டினம் வந்தான். எல்லோரும்

வணிகனிடம் செய்திகளைக் கூறி ஆறுதலும் கூற, வணிகனும் மாமன் மகளையும் மற்றைய செல்வங்களையும் கைக்கொண்டு, நாளொன்றுக்கு அரைக்காவத தூரமாக நடந்து வழியிலுள்ள திருப்புறம்பயமென்ற ஊரையடைந்தான். இரவு அங்கே தங்க லாமென்று கருதி அங்குள்ள கிணற்றில் நீராடி உணவு சமைத் துண்டபின் கோயில்படியில் தலைவைத்து உறங்கினான் வணிகன்.

அப்போது விதியின் ஏவலால் கொடிய நாகம் வந்து அவனைத் தீண்டியது: அவனும் மயங்கி மாய்ந்தான். உடன் வந்தோர் குரலெடுத்தழுது புலம்ப, பங்கய மலர்க்கொம்பன்ன பாவை, சிங்க ஏறுெத்த வணிகனின் ஆகம் தீண்டாமல் அழுது அரற்றுகிறாள்.

'முருகனைப்போன்றவனே! என்னையகனே! என்னைவிட்டு ஏகியது ஏன்! உன் நிழலாக வரும் என்னை விட்டு விண்ணாட்டர மகளிரைத் தழுவ விருப்புற்றனையோ! அல்லது உன் மாமனையும் மாமியையும் காணச் சென்றாயா? அப்படியானால் என்னையும் அழைத்துச் சென்றிருந்தால் நானும் என் தாய் தந்தையரைக் கண்டு மகிழ்ந்திருப்பேனே' என்று வாய் ஓயாமல் அரற்றும் இவள் துன்பத்தைச் சிலர் அங்குவந்து தங்கியிருந்த திருஞான சம்பந்தரிடம் தெரிவித்தார்கள். தலந்தோறும் தரிசனம்செய்து வரும் ஞானசம்பந்தப் பெருந்தகை திருக்கோயிலுக்கு வந்து வணிகக் கன்னியைக் கண்டு அவலத்தின் காரணங் கேட்டறிந் தார். பின்பு அவ்வணிகனின் உடம்பு அமிர்தமயமாகும் படி அருட்கண்வைக்க நஞ்சு அவனுடலைவிட்டுக் குதித்தோடியது. அவன் உறங்கி எழுபவன்போல் மகிழ்ச்சியோடு எழ, அனைவரும் மகிழ்ந்து ஞானசம்பந்தரைப் போற்றினர்.

வணிகனின் திருமணம் :

தேனொழுகு தாமரைபோல் கன்னியவள் பின்னும் ஒதுங் கியே நிற்பது கண்டனர், இறந்தபோதும் உயிர்த்தபோதும் வணிகனைத் தீண்டாமல் இருந்த அக்கன்னியின் கற்பைக் கண்டு வியந்தனர். திருஞானசம்பந்தர் 'இவளை இங்கேயே மணந்து மதுரைசெல்க' என்றருளிச்செய்ய, வணிகன் 'உறவினர்களும் போதிய சான்றுகளுமில்லாமல் இவளை மணப்பது எப்படி' என்று கைபிசைந்து நிற்க, காழிவள்ளல் 'இங்குள்ள வன்னி யும் கிணறும் இலிங்கமுமே சான்றாகும் - இவளை மணம் புரி' என்று அருளாணையிட்டார். வணிகனும் அப்படியே மணந்து பின் மதுரை சென்றான்.

இல்லறத்தில் எழுந்த பூசல் :

மதுரையில் இருந்த மூத்தவளின் குமாரர்கள் சற்றே மூர்க்ககுணம் கொண்டவர்கள். அவர்கள் இளையவள் பெற்ற மைந்தனோடு விளையாடும்போது ஒருநாள் அம்மைந்தனைச் சிறி அடித்தனர். உடனே மூத்தவள் இவளோடு சண்டையிட வந்து விட்டாள். 'ஊரும் பெயரும் இல்லாதவள் நீ; என் கணவனை மணந்ததற்கு சாட்சிதான் உண்டா? உனக்கென்ன இறுமாப்பு' என்றெல்லாம் வினுக்கள் தொடுக்கவும், இளையவள் ஒன்றும் தோன்ருமல் நைந்து நின்ருள்.

மறுநாள் சோமசுந்தரப் பெருமானின் திருக்கோயிலுக்குச் சென்று தன் குறையெல்லாம் கூறியழுது 'தேவரீர் திருப்புறம் பயத்திலிருந்த சாட்சிகளை இங்குக் காட்டாவிட்டால் என்கற்பு ஐயத்திற்குரியதாகும்' என்று அழுது விண்ணப்பித்தாள். வன்னியும் கிணறும் இலிங்கமும் இங்கு வந்தால்தான் உன் மணத்தை ஒப்புவேன் என்ற மூத்தவள் நாணிக் கவிழ, இளைய வளுக்காக இறைவன் அவைகளைக் கோயிலுக்கு வடகிழக்குத் திசையில் வரவழைத்தான்.

அல்லலுற் றழுங்கி நின்ருள் பரிவுகண் டந்தண் கூடல்
எல்லையில் கருணை மூர்த்தி யருளினல் எவருங் காணத்
தொல்லையின் படியே யன்னுள் சொல்லிய கரிகள் மூன்றும்
ஒல்லைவந் திறுத்த கோயிலுத்தர குணபா லெல்லை.

மூத்தவள் உட்பட மதுரை நகரத்தாரும் இளையவளை வாழ்த்தி னர். வணிகன் இளையவளைப் பழித்துப் பழிதூற்றிய மூத்தவளை இல்லம்விட்டே துரத்தினன். அப்போது கருணையுள்ளம் கொண்ட இளையவள் 'எனக்கு அவளே தாயும் துணையுமாகும். அவளால்தான் என் கற்பின் திறனைப் பலருங் கண்டனர். நாங்களிருவரும் மனமொத்து வாழ்வோம்' என்று வணிகனிடம் கூறி அப்படியே இசைந்து வாழ்ந்தாள். மைந்தர்களும் பகை மறந்து ஐந்தலை நாகத்தின் ஐவாய் வழிச்சென்ற உணவு அதன் உடலை அடைவதுபோல ஒரே குலத்திற்கு இவர்கள் அத்துணை பேரும் பெருமை கூட்டினர்.

இப்படியாக, சோமசுந்தரப் பெருமான் செய்த திருவிளை யாடல்களுக்கு அளவில்லையானலும் அவன் சொன்ன அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் உங்களுக்குச் சொன்னேன் சொன்னேன் என்று அகத்தியர் மற்றைய முனிவர்களிடம் கூறி பெருமானையும் அம்பிகையையும் அகத்திலிருத்திப் பேரானந்தம் கொண்டார்.

அருச்சனைச் சிறப்பு

ஞானக் கடலாம் அகத்தியரையும் அவர்மனைவி உலோபா முத்திரையையும் ஆசனத்திருத்தி வழிபட்ட முனிவர்குழாம் ஒருசேர – நீங்கள் சொன்ன திருவிளையாடல்களைச் செய்த பெருமானை நாங்கள் காண அவாவினோம் - என்றனர். என் மனத்தில் இருப்பதையே கூறினீர்கள் என்று அகத்தியரும் பாராட்டி ஒரு நல்ல நாளில் கங்கையில் நீராடி அகிலேசனும் விச்வநாதனை வழிபட்டு உத்தரவுபெற்றுத் தவமென்ற தேரேறி விண் வழியாய்க் கிளம்பினார்கள்.

விண்வழி கண்ட மண் தலங்கள் :

இலங்கையர் கோனை வெல்வதற்குமுன், வலிமைவேண்டி இராமன் பூசித்து அருள்பெற்ற ஏமகூடம் கண்டார்கள்.

உச்சியில் ஏறி கீழேவிழுந்து மாய்பவர்களின் எண்ணங்களை மறுமையில் கைகூட்டும் ஸ்ரீ சைலம். பசுவின் காதுபோன்றதும் சிவராத்திரியில் தேர் விழாவைக் கொண்டாடுவதுமான திருக் கோகரணம். கார்த்திகை மாதக் கார்த்திகை நாளில் சிவபெருமானுக்குவிழா நடக்கும் மேலைக்கடற்கரைத்தலமாம் திருவஞ்சைக் களம். கண்ணப்பரின் அன்பை உலகறியச் செய்த திருக் காளத்திமலை. இடது காலைத் தூக்கி ஆடி காளியைத் தோற் கடித்த சிவனது தலம் திருவாலங்காடு. மாமரத்தின் அடியில் காமாட்சிதவம் புரியும் காஞ்சி. திருமால் தன் காத்தற் தொழி லுக்கான வல்லமை தரவேண்டிச் சிவனைப் பணிந்த திருமாற் பேறு. இருமுனிவர் கழுகாக நின்று தவம் புரியும் திருக்கழுக் குன்றம். சிவன், முனிவர்களுக்கு வேதம் ஓதிய இடமாகிய திரு வோத்தூர். அடிமுடிதேட, அளக்கலாகாப் பொருளாய் நின்ற திருவண்ணாமலை. அந்தகனை வதைத்த திருக்கோவலூர் ஊழிக் காலத்திற்கு முன்னும் பின்னும் அழியாத பழமலை. (விருத்தா சலம்.)

திரிபுர தகனம் செய்த திருவதிகை. கூத்தப்பெருமான் ஆனந்த நடமிடும் சிதம்பரம். தேவர்கள் ஊழியில் அழியா வண்ணம் அவர்களைத் தோணியில் ஏற்றிக் காப்பாற்றிய தோணிபுரம் (சீர்காழி). சடாயு, சம்பாதி என்னும் கழுகுகள் வழிபாடு செய்ய அவர்களுடைய ஆணவமலமகல மருந்தாகிச் சிவபெருமான் உறையும் புள்ளிருக்கு வேளூர். காமனைக் காய்ந்த திருத்தலம் திருக்குறுக்கை. வெள்ளையானை, இழந்ததன் கொம்புகளை மீளப்பெற்ற திருவெண்காடு. இறைவனை மயிலுருக் கொண்டு அம்மை பூசித்த தலமாம் மயிலாடுதுறை. தக்கனுக்கு

ஆட்டுத்தலையை அருளிய சிவனது தலமாம் திருப்பறியலூர். மார்க்கண்டேயருக்காகக் காலனை உதைத்த அற்புதம் நடந்த திருக்கடவூர். சக்கரத்தால் சலந்தரனைக் கொன்ற பதியாம் திருவிற்குடி. தாரகாசுரனை விநாயகப்பெருமான் கொன்றபின் இறைவனை வழிபட்ட திருச்செங்காட்டங்குடி. மூன்று கோடி முனிவர்கள் வழிபட்டுப் போற்றிய திருக்கோடிகா. தன்பால் பிறந்தவர்களுக்கு வீடுபேறுதரும் திருவாரூர். நான்கு வேதங்களும் பூசித்த திருமறைக்காடு. வரகுணனைப் பிடித்த பிரம்மஹத்தியைப் போக்கிய மகாலிங்கம் அமர்ந்த திருவிடைமருதூர். தாடகை என்ற பெண்ணின் அன்பிற்காகத் தலைதாழ்த்தி, குங்குலியக்கலயரின் அன்பில் நிமிர்ந்த பெருமான் எழுந்தருளும் திருப்பனந்தாள். முருகன் சிவனை வழிபட்டதும்-சண்டீசர் விசாரசர்மர்என்றபெயரோடு சிவனைவழிபட்டதுமான திருச்சேய்ஞலூர். மகாமகத்தில் நீராடுவோரின் பாவம் போக்கும் திருக்குடந்தை. தந்தைக்கு உபதேசித்த ஞானக்குமரனின் தலமான சுவாமிமலை.

வணிகனின் மகளுக்காக அவள் மணத்தின்போது சாட்சிகளாய் நின்ற வன்னி, கிணறு, இலிங்கம் மூன்றுங்கொண்ட பதி திருப்புறம்பயம். திருநந்திதேவர் சிவபெருமானின் திருவுரு வேண்டித் தவமிருந்த திருவையாறு. பிரமனின் தலையைக் கிள்ளிய திருக்கண்டியூர். சிலந்தியும், யானையும், உமையும் திருமாலும் வழிபட்ட திருவானைக்காவல். திரிசிரன் என்ற அரக்கன் பெயர்கொண்ட திரிசிராமலை. இப்படியான தலங்களை விண்ணிலிருந்து கண்டுவணங்கிப் பின் காவிரியாறு சோழவள நாடு - தமிழ்ச் சுவையறிந்த வைகையாறு என்றெல்லாவற்றையும் தாண்டி, பாண்டி நாட்டைக் கண்டனர். விண்ணிலிருந்து பார்ப்பதனல் மரம் செறிந்த காடுகளெல்லாம் சிறுசெடிகளைப் போலவும், நதி சிறிய கால்வாய் போலவும், பெருந் தடாகங்கள் சிறிய ஊற்றுக்கள் போலவும், வயல்கள் சிறுபாத்திகள் போலவும் தென்னைகள் புற்கள் போலவும், வாழைத்தோட்டங்கள் மஞ்சட் கொல்லைகள் போலவும் காட்சியளித்தன.

பாண்டிய நாட்டிலுள்ள திருக்கொடுங்குன்றம், திருப்புத்தூர், திருவாடானை, திருப்புனவாயில், திருப்பூவணம், திருக்கானப்பேர், திருச்சுழியல், திருவிராமேச்சரம், திருநெல்வேலி, திருக்குற்றாலம், திருப்பரங்குன்றம், திருவேடகம், திருவாப்பனூர் போன்ற பதிகளையும் பார்த்து இன்புற்றனர்.

பெருமானைப் பணிந்து பேரானந்தம் கொள்ளல் :

வைகையைத் தொழுது பின் அண்டத்தைக் கடந்து திருமால் போல் உயர்ந்து நிற்கிற கோபுரத்தை முன் வணங்கினர். அதன்

பின் பொற்றாமரைத் தீர்த்தத்தை யடைந்து நீராடி முறையாகச் சித்தி விநாயகரை வழிபட்டனர். மூவுலகம் ஈன்றும் கன்னியாக இருக்கும் அங்கயற்கண்ணியின் திருமுன் வழிபாடு செய்தபின் விண்ணிழி விமானத்துள் இருக்கும் கண்ணுதற் கடவுளைத் தொழுது அப்பெருமானின் திருவடித் தாமரைகளைத் தம் சிரசில் சூடிக்கொண்டனர்.

அதற்கடுத்த நாள் முனிவர்கள் நியமத்தோடு நீராடி திருக்கோயில் புகுந்து வழிபாடு செய்தனர். தேன், கருப்பஞ்சாறு பஞ்சாமிர்தம், சந்தனம், பன்னீர் போன்றவைகளால் இறைவனுக்கு அபிடேகம் செய்து, தூப தீப உபசாரஞ்செய்து, ஆயிரந் திருநாமங்கூறி அர்ச்சித்து மகிழ்ந்தனர். சோமசுந்தரப் பெருமான் செய்த திருவிளையாடல் அறுபத்து நான்கையும் ஒவ்வொன்ருய் எடுத்துக் கூறிப் போற்றினர்.

அளவைக ளாலும் வேத முதனூல்க ளாலும்
அயன்மாய னாலு மளவாக்
களவையு னக்குநாம குணசின்ன சாதி
கதிசெய்தி யில்லை யவையும்
உளவென யாம நிந்து துதிசெய்ய வேகொல்
உலகஞ்செ யன்பினெளிதாய்
விளையருண் மேனிகொண்டிவ் வறுபத்து நாலு
விளையாடல் செய்த படியே.

என்று துதித்த வசிட்டாதி முனிவர்களையும் அகத்தியரையும் சிவலிங்க வடிவினின்றும் எழுந்து வெளிப்போந்த விமலன் பார்த்து, 'முப்பகை கடந்த முனிவர்களே! நீங்கள் செய்த வழிபாடும் துதியும் எல்லாத் தலங்களுக்கும் எல்லாவுயிர்களுக்குமாகி நிறைந்து எமக்கும் பெருமகிழ்ச்சியைத் தந்தது. உங்கள் தலைவராகிய அகத்தியர் என்னையும், உலோபா முத்திரை, உமையையும் ஒத்தவர்கள்' என்று அருள்மொழி கூறி இலிங்கத்துள் கரந்தருளினர்.

அதன்பின் அகத்தியர் முதலியோர் அனைவரும் தம்தம் பெயரால் ஒவ்வொரு சிவலிங்கம் அமைத்து வழிபட்டு, மதுரையில் தபோவனமொன்று அமைத்துத் தங்கினர். அங்கிருந்து கொண்டு மூன்று காலங்களிலும் அங்கயற்கண்ணி உடனுயகொழிதமிழ்க் கூடலின் கொன்றைவேணியனைத் தரிசித்து வழிபட்டுக் கொண்டிருந்தனர்.

நிறைந்தது.

உறவும் உணர்வும்

நீதிபதி, கனம். S. மகராஜன் B. A., B L,

குழந்தையோடு குலாவும் தாய் உள்ளத்தில் அன்பு வெறி ஏறுகிறது.

"உச்சி தனைமுகந்தால் - கருவம் ஓங்கி வளருதடீ!
மெச்சி யுனையூரார் - புகழ்ந்தால் மேனி சிலிர்க்குதடீ!"

என்று மலடியால் சொல்ல முடியாது; தகப்பனுல்கூடச் சொல்ல முடியாது; தாய்தான் சொல்ல முடியும். உறவு நெருங்க நெருங்க, உணர்வு பெருகுகிறது.

ஆனல், உறவில் எல்லாம் மிக்க உன்மத்தத்தைக் கொடுக்கும் உறவு எதுவென்றல், காதலன் காதலி உறவுதான். மனிதனுடைய குடுமியைப் பிடித்து ஆட்டிவைக்கும் மாபெரும் சக்திகள் இரண்டு - பசியும் காமமும். மனித வரலாற்றை ஊன்றிப் படிக்கும் போது இந்த உண்மை விளங்குகிறது. இங்கிலாந்து என்ற ஒரு சிறிய தீவில் மக்களுக்குப் போதிய உணவு கிடைக்கவில்லை. பசியைத் தீர்ப்பதற்காக, காடும் கடலும் கடந்து பல நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்தும், போரிட்டும் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையே ஆங்கிலேயர் நிலை நாட்டினர்கள். இந்த வெற்றிக்கெல்லாம் அடிப்படையாக இருந்தது பசி. இப்படியெல்லாம் கிடைத்த ஒரு மகத்தான சாம்ராஜ்யத்தைத் தூவென்று உதைத்துத் தள்ளிவிட்டார் எட்டாவது எட்வர்ட் மன்னர். அதற்குக் காரணமாக இருந்தது காதல். காதல் உறவிலே அவ்வளவு வன்மை இருக்கிறது. அந்த உறவிலே மனிதன் உணர்வின் உச்ச நிலையைத் தொட்டுவிடுகிருன்.

மனித வாழ்க்கையிலேயுள்ள பல விதமான உறவு நிலைகளிலே நின்று, தம் உணர்வுச் செல்வத்தைப் பெருக்கியவர்கள் நம் ஞானிகள். அந்த உணர்வுச் செல்வத்தையெல்லாம், இறைவனேடு ஊடாடுவதில் பயன்படுத்திப் பேறுபெற்றுர்கள் அவர்கள்.

இறைவனுக்கு நாமம் இல்லை, உருவம் இல்லை என்ற அறிவு அவர்களுக்கு இருக்கத்தான் இருந்தது. ஆனல், நமது புலனுக்குத் தெரியாத அச்செம்பொருளோடு நெருங்க வேண்டுமே.

ஆகவேதான், அப்பொருளுக்கு நாமத்தையும் உருவத்தையும் கற்பித்தார்கள். அதனுடன் நிற்கவில்லை. மனித வாழ்க்கையில் தாம் அநுபவித்த உறவுகளை, இறைவனோடு இணைத்து, உணர்வையும் ஈடுபாட்டையும் வளர்த்தார்கள்.

தயிருக்குள்ளே வெண்ணெய் ஒளிந்துகொண்டிருக்கிறது. நமது கண்ணுக்கு அது தெரிவதில்லை. ஆனால், அதற்குள்ளே மத்தை நட்டுப் பொறுமையோடும் ஆர்வத்தோடும் கடைந்தால், வெண்ணெய் திரண்டு கண்முன் வந்து நின்றுவிடுகிறது. அது போலவே, உள்ளத்தினுள்ளே ஒளிந்துகொண்டு நிற்கிறது இறைத் தத்துவம். அதற்குள்ளே, உறவு என்ற கோலை நட்டு, உணர்வு என்னும் கயிற்றினால் கடைந்தால், ஒளிந்து நிற்கும் பரம்பொருள் வெளிப்பட்டுவிடும் என்று கண்டார்கள் நம் முன்னோர்கள்.

"உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்நிற்குமே"

என்றார் அப்பர் சுவாமிகள்.

வெட்ட வெளியாகப் பரந்து நிற்கும் இறைத் தத்துவத்தைப் பார்த்து, "ஏ, மச்சான்!" என்று சொல்லி, தோள்மேல் கை போட்டு உறவாட முடியாது. ஆனால், அந்தப் பொருளுக்குக் கண்ணன் என்ற நாமத்தைச் சூட்டி, ஆயர் பாடியிலே யசோதையின் மடியிலே விளையாடும் குழந்தையென்று நினைத்துவிட்டோமானால், அந்தப் பரம்பொருள் நமக்குக் கிட்டேயே வந்துவிடுகிறது. நாமே யசோதையென்று நினைத்துவிட்டாலோ, சொல்ல வேண்டியதில்லை; கையிலெடுத்து, மார்போடு தழுவிக் கொஞ்சிக் குலாவுவதற்குரிய நமது உடைமையாகிவிடுகிறது அப் பரம்பொருள்.

தாய்மையுறவைப் பெரியாழ்வார் 'எப்படிப் பயன்படுத்துகிறார், அதனால் அவருடைய உணர்வு எப்படிச் செழிப்படைகிறது' என்று பார்ப்போம். கண்ணனைத் தொட்டிலில் போட்டுத் தாலாட்டுகிறார் பெரியாழ்வார். மூவுலகையும் அளந்த கால்களுக்குத் துணித்தொட்டில் எம்மாத்திரம்? ஒரே உதையாக உதைத்துத் தொட்டிலைக் கிழித்துவிடுகிறது குழந்தை. உடனே கண்ணனை எடுத்துக்கொள்கிறாள் தாய். அவ்வளவுதான்; அவளுடைய இடுப்பிலே ஒரு மிதி மிதிக்கிறான் கண்ணன்; இடுப்பு முறிந்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். இப்படிப் படுத்துகிற பிள்ளையிடத்திலே தாய்க்கு அதிகப் பாசம்

ஏற்படுகிறது. அப்படியே கண்ணனை ஒடுக்கி மார்போடு அணைத்துக்கொள்கிறாள். அந்தச் சமயத்திலே, வயிற்றிலே ஒரு பாய்ச்சல் பாய்கிறான் அவன். இப்படிப் படாத பாடெல்லாம் பட்டுக் கண்ணனை வளர்க்கிறாள். அவளுடைய உடம்பு தேய்ந்து மெலிகிறது. மெலிந்தால்தான் என்ன? தாய்க்கு இந்தப் பொல்லாத குழந்தையைப் பற்றிப் பேசும்போதெல்லாம் உள்ளூர ஓர் ஆனந்தம் ஏற்படுகிறது. பாடுகிறார் பெரியாழ்வார் :

" கிடக்கில், தொட்டில் கிழிய உதைத்திடும்,
எடுத்துக் கொள்ளில், மருங்கை இறுத்திடும்,
ஒடுக்கிப் புல்கில், உதரத்தே பாய்ந்திடும்,
மிடுக்கி லாமையால் யான் மெலிந்தேன், நங்காய். "

தாய்க்கும் சேய்க்கும் இடையே இருக்கும் உறவு, நமக்குத் தெரிந்த உறவு, நம் அநுபவத்துக்கு உட்பட்ட உறவு, நம் உணர்வைத் தட்டி எழுப்பவல்ல உறவு. அந்த உறவை, இறைவனிடத்திலே இணைத்து அவனோடு நாம் ஊடாடும் போது, நம் உணர்வு பெருகுகிறது; ஆணவம் கரைகிறது; ஆனந்தம் மேலிடுகிறது.

குழந்தையாகத்தான் இறைவனைப் பாவிக்க வேண்டும் என்பதில்லை. அவனைத் தாயாகக் கொண்டு வணங்கும்போது உள்ளத்தில் அச்சம் அறவே நீங்கி, தெம்பும் தெளிவும் ஞானமும் பிறக்கின்றன.

பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் நெல்லையில் வாழ்ந்தவர். நெல்வேலியில் கோயில் கொண்டிருக்கும் வேய்முத்தரையும் வடிவம்மையையும் நாள்தோறும் வணங்கும் பரமபக்தர். 'தகப்பனைக் காட்டிலும் தாய்க்குக் கருணை அதிகம்' என்று தம் குடும்ப வாழ்க்கையிலே உணர்ந்தவர். தம்முடைய குறைகளையெல்லாம் வேய்முத்தரிடத்திலே சொல்லிச் சொல்லிக் கதறுகிறார். ஆனால், வேய்முத்தருக்கு மனம் இளகவில்லை; என்ன செய்வது? தாயினிடத்தில் முறையிட்டால் தகப்பனிடத்தில் சிபார்சு செய்யமாட்டாளா என்று நினைக்கிறார்.

" அவர் திரிபுரத்தை எரிக்கப் புறப்படும் போது என்னைப் பற்றிச் சொல்லிவிடாதே, அம்மா. இளக்கமாக இருக்கும் நேரம் பார்த்து, அவரிடம் நயமாக என்னைப்பற்றிச் சொல்லக் கூடாதா? அப்படிச் சொன்னால், உன் வாயில் இருக்கும் முத்து சிந்தியா போகும்?" என்று தாயினிடத்திலே இடித்துச் சொல்லுகிறார் :

" ஆய்முத்துப் பந்தரின்
மெல்லணை மீதுன் அருகிருந்து
'நீமுத்தம் தா' என்று
அவர்கொஞ்சும் வேளையில், நித்தநித்தம்
வேய்முத்தரோடு என் குறைகளெல்லாம்
மெல்ல மெல்லச்சொன்னால்,
வாய்முத்தம் சிந்திவிடுமோ,
நெல்வேலி வடிவம்மையே."

அப்பாலுக்கு அப்பால் இருக்கும் பொருளைத் தாயாகக் கருதி உறவாடும் போது, அது இப்பாலுக்கு இப்பால் வந்து நம் இதயத்தோடு ஒட்டிக்கொள்கிறது.

இனி, காதல் உறவு, எப்படிப் பக்தி உணர்வைத் தூண்டி விடுகிறது என்று பார்ப்போம். "மனுஷப் பயலுக்கு வாழ்க்கைப் பட மாட்டேன். நாராயணனையே என் அழகிய மணவாளனாகக் கொள்வேன்," என்று உறுதியோடு நோன்பிருக்கிறாள் ஆண்டாள். கண்ணன் என்ற அந்தக் கருந்தெய்வத்தைச் சதா நினைந்து உருகிக்கொண்டிருக்கிறாள். அவளுடைய உடல் வாட்டத்தைக் கண்ட தோழிகளுக்கு அவளுடைய இதயத்தின் நிலை தெரியவில்லை. "டாக்டரை அழைத்துவரட்டுமா?" என்று அசட்டுத்தனமாகக் கேட்கிறார்கள். நொந்து போயிருக்கும் ஆண்டாளுக்கு, இந்த அசட்டுக் கேள்வி மேலும் எரிச்சலை உண்டாக்குகிறது. "வைத்தியமாவது, ஒன்றாவது! என் நோயைத் தீர்க்க, ஒரே ஒரு மருந்துதான் இருக்கிறது" என்று சொல்லுகிறாள். என்ன மருந்து அது? "என்னுடைய தீராக் காதலைத் தெரிந்தும் தெரியாததுபோலப் பாசாங்கு செய்யும் அந்த அரங்கப் பெருமான் இருக்கிறானே, அவனுடைய திருமேனியில் படிந்து கிடக்கும் பட்டுப் பீதாம்பரத்தை எடுத்து வாருங்கள். அவனுடைய வேர்வை மணத்தோடு கூடிய பீதாம்பரத்தை என் முகத்தருகே கொண்டு வந்து வீசுங்கள். என் வாட்டமெல்லாம் தணிந்துவிடும்," என்று சொல்லுகிறாள் :

" கண்ணன் என்னும் கருந்தெய்வம்
காட்சி பழகிக் கிடப்பேனைப்
புண்ணில் புளிப் பெய்தாற்போல்
புறம்நின்று அழகு பேசாதே,
பெண்ணின் வருத்தம் அறியாத
பெருமான் அரையில் பீதக
வண்ண ஆடை கொண்டென்னை
வாட்டம் தணிய வீசீரே "

என்று ஆண்டாள் பாடும்போது, காமம் பக்தியாக மாறும் ரசவாத வித்தையைக் கண்டு அதிசயிக்கிறோம். நாயக நாயகி பாவத்தில் கொஞ்ச காலமாவது நின்று இறைவனோடு உறவாடிப் பார்த்தவர்களுக்குத்தான், அந்த உறவால் ஏற்படும் எல்லை மீறிய உணர்வு வளத்தைச் சுவைத்து அநுபவிக்க முடியும். ஆனால் காதல் பாதையில் சென்று இறைவனை அடைவது என்பது சமானிய மக்களுக்கு எளிதான காரியம் அல்ல. காதலால் ஏற்படும் சுகம் ஒரு பக்கம் இருக்க, அதனால் ஏற்படும் அல்லல் அனந்தம்; பொருமை, ஏமாற்றம், பிரிவாற்றுமை இவற்றையெல்லாம் சமாளிக்கவேண்டுமென்றால், தன்னையே தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். ஆண்டாள், மாணிக்கவாசகர் போன்ற துணிச்சல்காரர்களே காதல் பாதையில் சென்று இறைவனையடைய அருகதை உடையவர்கள்.

இறைவனைத் தாயாகக் கருதி உறவாடுகிறவர்களுக்கு இப்படியெல்லாம் அல்லல்கள் ஏற்படுவதில்லை, என்ன குற்றம் செய்தாலும் மன்னித்தருள வேண்டியது தாயின் பண்பு, அச்சம் இல்லாமல் தாயோடு பழகலாம். வெற்று விரலைத் தாயின் வாயில் வைத்து "அம்மா, இந்தா சோறு" என்று சொல்லு கிறது குழந்தை. "அமிர்தமாயிருக்கு, கண்ணே," என்று தாய் அதை அநுபவிப்பாள். காதலி வாயிலே வெற்று விரலை வைத்தால், என்ன செய்வாள்? கடித்தே போடுவாள்.

நம்மை அடிமையாகவும், இறைவனை ஆண்டவனாகவும் பாவித்து உறவாடும் போதும் அபாயம் ஒன்றும் ஏற்படுவதில்லை; பொறுப்பு முழுவதையும் அவன் ஏற்றுக்கொள்கிறான்; நம் தலைமேலிருக்கும் பாரம் இறங்கிவிடுகிறது. ஆண்டவன் பராமுக மாக இருந்தால், அவனோடு வழக்காடுவதற்கு அடிமைக்கு உரிமை இருக்கிறது. துடுக்குத்தனமாகக்கூட வழக்காடலாம்.

திருச்செந்தூர் முருகனிடத்திலே போய் இப்படி வழக்காடு கிறார் படிக்காசுப் புலவர் என்ற பக்தர். "இத்தனை நாளும் நீ சிறு பிள்ளையாக இருந்தாய். பொறுப்பில்லாமல் சுற்றிக்கொண் டிருந்தாய். இதுவரையிலும் என்னைக் கவனிக்காமல் இருந்தது சரி. இப்போதோ, நீ மீசை முளைத்த ஆடவனாகிவிட்டாய். அன்னமும் மயிலும் போல இரண்டு பெண் கொண்ட ஆண் மகன் நீ. இனிமேலும், என்னைக் கவனிக்காமல் இருக்கலாமா? உனக்குப் பொறுப்பு வேண்டாமா?" என்று உரிமையோடு கேட்கிறார்.

"முன்னம் நின் அன்னை அமுதூட்டிப்
பொட்டிட்டு மையிட்டு முத்தமிட்டுக்
கன்னமும் கிள்ளிய நாளல்லவே
என்னைக் காப்பதற்கே,
அன்னமும் மஞ்ஞையும் போல்இரு
பெண்கொண்ட ஆண்பிள்ளை நீ
இன்னமும் சின்னவன் தானோ,
செந்தூரில் இருப்பவனே!"

"கடவுளுக்கு எதற்குப் பெண்டாட்டி?" என்று ஒரு பெரியவர் கேட்டார். கடவுளுக்குப் பெண்டாட்டி வேண்டியதில்லை தான். ஆனால், அவனோடு நாம் இப்படியெல்லாம் நெருங்கி உறவாடுவதற்கு நமக்கு நாமே வசதி செய்து கொள்ள வேண்டுமல்லவா? அதற்காகவாவது, அன்னமும் மஞ்ஞையும் போலிரு பெண்ணை அவனுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும். அப்படிச் செய்யும் போது, உறவு வளர்கிறது, உணர்வு பெருகுகிறது, இறையின்பம் கிட்டுகிறது. ஆகவேதான், சுவானுபவத்தில் இந்த உண்மையை உணர்ந்த அப்பர் சுவாமிகள் பாடினார்:

"உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்நிற்குமே"

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagateswaraswamy Devasthanam, Tirukkadaiyur.

I was fortunate to have dharsan of the deities of this very famous, very holy and very beautiful temple to day and am grateful to the temple authorities for their help and courtesy. I am particularly struck by the cleanliness of the premises of the temple and would like to congratulate those incharge of the up-keep.

(Sd.) G. V. Narayanan,
I. P. S,
D. I. G. of Police, Trichy.

20—7—73.

அரட்டு

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி.

சிலரும் பலரும் கூடி இறைந்து பேசியும், குறும்புரைகள் கூறியும் செய்து வரும் செயல்களை 'அரட்டை' என்ற சொல்லால் குறிக்கின்றோம். முறை மீறிய செயல்களையே இந்தச் சொல் குறிக்கின்றது. ஓயாது பேசுகின்றவனைக் குறிக்கும்போது 'அவன் ஒரு வாய் - அரட்டை' என்றும் சொல்லுகின்றோம். அரட்டையை அடக்குவதாயின் அதற்கு ஒரு வன்மை வேண்டும். அந்த வன்மை இல்லாதவர் அரட்டையர் பக்கம் செல்லாமல் ஒதுங்கிப் போதலும், வன்மை உடையவர் அங்குச் சென்று அதனை அடக்குதலும் உலகில் காண்பனவே.

அப்பர் தேவாரத்தில், ஐந்தாம் திருமுறைப் பகுதியில், இந்த அரட்டை வருகின்றது, அதனை அடக்குதல் பற்றியும் வருகின்றது. ஐம்புலன்களின் சிறு குறும்புகளை "அரட்டு" (அரட்டை) என்ற சொல்லால் அடிகள் குறிக்கின்றார். அரட்டைகள் புரியும் ஐம்புலன்களை 'அரட்டர் ஐவர்' என்று கூறும் அடிகள், தக்கனது வேள்வி யரட்டினை அடக்கிய சிவபிரானை 'அரட்டு அடக்கி' என்றும் சொல்கின்றார். அவ்வழகிய திருப்பாட்டு இது :

'முருட்டு மெத்தையில் முன் கிடத்தா முனம்
அரட்டர் ஐவரை ஆசறுத்திட்டுநீர்
முரட்டடித்த அத்தக்கன்றன் வேள்வியை
அரட்டடக்கி தன் ஆரூர் அடைமினே'

"கடக்கும் திறல் ஐவர் கண்டகர் தம் வல்லரட்டை, அடக்கும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே" - என்று திருவாசகப் பதிப்பில், வரும் பாடற்பகுதியிலும் "அரட்டை" காணப்படுகின்றது. 'வல்லரட்டை' என்ற பாடமே' வல்லாட்டை' என்பதனினும் சரியான பாடம் என்பது தமிழ் அறிஞர் திரு. மு. அருணாசலம் அவர்கள் முடிவு. *

---

* பார்க்க : திருவாசகம் ஆராய்ச்சிக் குறிப்புக்கள்; சைவ சித்தாந்த மகாசமாச அறுபதாண்டு நிறைவு விழாமலர் - 1965; பக். 160.

இந்த அரட்டு என்ற சொல் நுட்பமாகச் சிந்தித்தற்குரிய தாக உள்ளது. 'அரற்று' என்ற சொல் 'அரட்டு' என்று ஆயிற்றோ என்றும் கருத இடமிருக்கிறது. ஓயாது ஒலி செய்வோர் என்ற பொருளில், அழுது தொலைப்போர் என்ற வெறுப்புக் குறிப்பில், 'அரற்று' என்றோ, 'அரற்றை' என்றோ முதற்கண் கூறியிருந்திருக்கக் கூடும். அதுவே (அரற்று >) அரட்டு என்று மாறிய வடிவத்துடன் வழங்கப்பட்டிருக்கலாம்.

பற்று > பட்டு என்ற மாற்றம் தமிழிற் சில விடங்களில் காணப்பெறுகின்றது.

பற்று > பத்து

என்ற மாற்றமே (ற > த) பெரும்பான்மையாக இருப்பது.

(1) உற்று > உத்து

(2) புற்று > புத்து

(3) ஒற்று > ஒத்து

(4) எற்று > எத்து

என்ற எடுத்துக்காட்டுக்களால் அது விளங்கும். பிறக்கின்ற இட ஒற்றுமை அண்மையினால் இந்த மாற்றம் நிகழக்கூடும் என்பது ஒலியியல் உணர்ந்தால் அறியும் உண்மையே,

சுழற்று > சுழட்டு

தீற்று > தீட்டு

என்ற மாற்றம் பேச்சுத் தமிழில் பெரும்பாலும் இன்று வழங்கு தலும் கருதத்தக்கது.

நகரம் டகரமாக மாறும் நிலையும் தவிர்க்க வியலாததே.

நகரம் 'ட்ற' என்றே ஒலிக்கப்பட்டுவருவதை நோக்க இது விளங்குவதாகும்.

பலர் இணைந்து வாழ்வதனால், ஊர்கள் உண்டாகின்றன; அவ்வாறு சேர்ந்து பற்றுவதால், பற்றிக்கொண்டு வாழ்வதால் 'சேரி' என்றும் 'பற்று' என்றும் ஊர்களுக்குப் பெயர்கள் வழங்கி வருவதும் நம் தமிழகத்திற்குப் புதுவது ஒன்றன்று.

(1) இலுப்பைப் பற்று > இலுப்பைப்பட்டு
(2) பல்லவராயன் பற்று > பல்லவராயப்பட்டு
(3) செங்கழுநீர்ப்பற்று > செங்கற்பட்டு
(4) சேற்றுப் பற்று > சேற்றுப்பட்டு
> சேத்துப்பட்டு
(5) கோனூர் பற்று > கோனூர்பட்டு

என்ற மாற்றங்களைக் காண இஃது உறுதியாகும். "பற்று என்பது நன்செய் நிலம் ஆகும்; அது தென்னாட்டில் பத்து எனவும், வடநாட்டில் பட்டு எனவும் திரிந்து வழங்கும்" என்பர் சொல்லின் செல்வர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள். (ஊரும் பேரும் 1950; பக் 28) சித்தூர் நாட்டில் பூத்தலைப்பற்று என்ற ஊர் பூதலப்பட்டு என வழங்குதலையும், செங்கற்பட்டு என வழங்கிவருவது செங்கழுநீர்ப்பற்று என இலக்கியத்தே வழங்குதலையும் தெள்ளாற்றுப்பற்று என்ற ஊர் தெள்ளாரப் பட்டு என வழங்குதலையும் சொல்லின் செல்வர் அவர்கள் காட்டியிருப்பதும் கருதத்தக்கது. ‡

இந்தக் குறிப்புக்கள் நகர டகர ஒலிமாற்றம் தமிழில் நிகழ்ந்துள்ளமையை வரலாற்று முறையில் நாம் கண்டிடத் துணை புரியும். இந்த மாற்றம் அப்பரடிகள் காலத்திற்கு முன்பே நம் தமிழில் நிகழ்ந்துவிட்டமை எண்ணுந்தோறும் வியப்பாக உள்ளது. 'அரற்று' > 'அரட்டு' என்ற மாற்றம் சரியானது என்று அறிஞர் உலகு கருதினால், இந்த ஒலிமாற்றம் பழமை உடையது என்று துணியலாம். 'அரட்டடக்கிதன் ஆரூர் அடைமினே' என்ற தேவாரப்பகுதியில் நின்று புறப்பட்டு இப்படியெல்லாம் நம் சிந்தனை விரிகின்றது. இத்தகு சிந்தனைகளை ஒவ்வொரு சொல்லிலும் எழுப்பி நம் மொழியில் ஏற்பட்ட மாற்றத்தை, பொருட் கூறுபாட்டுத் தெளிவை அறிந்திட, அறிந்து மகிழ்ந்திடத் தேவாரம் துணைபுரிகின்றது.

‡ (செங்கழுநீர்ப்பற்று - Insenption 337 of 1908 ; M. E. R. 1933 - 34)

சித்த மருத்துவக்கலையின் சிறப்பு

டாக்டர். திரு. K. இராமகிருஷ்ணன்

"ஆயகலைகள் அறுபத்து நான்கு" என்பர் அறிவுடையோர்; மருத்துவக்கலையும் அவற்றில் ஒன்றாகும். கால சக்கரத்தினுள் புதுமையைத் தன்னகத்தே கொண்டு பழமை மாறாமல் உயர்ந்து நிற்பது சித்த மருத்துவமாகும். ஏனைய மருத்துவக் கலைகளைப்போல் அல்லாமல் மக்களுடைய வாழ்க்கையில் அன்று உதித்த குழந்தை முதல் தள்ளாடி நடமாடும் வயோதிகர் வரை அவர்கள் உண்ணும் உணவுடனும் வாழும் வாழ்க்கையுடனும் கலந்து உறவாடி தன்நிலை மாறாமல் நிற்பது சித்த மருத்துவமாகும். வருமுன் காக்கும் - நோய் காணா ஓர் முறையை நம் முன்னோர்களாகிய பதினெண் சித்தர்கள் நமக்கு அருளியிருக்கின்றார்கள். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். இம்மானிடப் பிறவியில் நோய் நொடியில்லாத வாழ்க்கை அமையுமாயின் அதனினும் கிடைத்தற்கரிய செல்வப் பேறு வேறு உண்டோ? இன்றைய நிலையில் நோய்களால் அல்லல் படும் உலக மாந்தர்கள் நோயினின்றும் விடுதலைபெற சித்தர்கள் கூறிய மருத்துவம் பெரிதும் பயன்படுவது.

> " நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல் " —திருவள்ளுவர்.

நோயின் மூல காரணத்தை அறிய ஆங்கில வைத்தியமுறை பல ஆராய்ச்சிகளைக்கண்டுள்ளது. ஆயினும் அது தணிக்கும் வழி கண்டதா? அதை முற்றிலும் அறவே ஒழிக்கும் வழியை இன்றுவரை அனேக வியாதிகளுக்கு அது காணவில்லை. உறுதியாக இல்லாமல் இப்போதைக்கு நோய்த்தணிய உள்ள சிற்சில முறைகளைக் கண்டுள்ளது. ஆனால் அகத்தியர், பதினெண் சித்தர்கள் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே மக்களுக்கு வரும் நோய்களைப் பல கூறுகளாக வகுத்து அவற்றிற்குரிய மருந்துகளையும்திட்டவட்டமாகக்கண்டறிந்ததுடன் அந்நோயின் மூலத்தை அறவே ஒழித்து செயலற்றிருந்த உறுப்புக்களையும், சுரப்பிகளையும் திட்டமாய் வேலை செய்யச்செய்யும் மருத்துவ வகைகளையும் மூலிகைகளையும் ஆராய்ந்து அறிந்து அவற்றினை நாம் உண்ணும் உணவோடு சேர்த்து உண்பதற்கு வழியையும் வகுத்துத் தந்திருக்கின்றார்கள் என்பதை அறிந்து பேருவகையும் வியப்பும் அடைகின்றோம்.

நோய் வராமலேயே தடுக்கும் முறைகளை ஆகாரத்தின் மூலம் அன்றாட சமையலில் சேர்த்து அறுசுவையுடன் சாப்பிடக் கூடிய முறையை நமக்குத் தந்திருக்கின்றார்கள் என்றால் சித்த மருத்துவத்தின் மகிமையை என்னவென்று சொல்லுவது! சித்த வைத்திய முறையில், நவீன விஞ்ஞான ஆராய்ச்சி முன்னேற்ற மில்லாத அக்காலத்தில் நோய்கள் பற்றிய முடிவான கருத்தும் அதற்கான தகுந்த மருத்துவமும் ஏற்பட்டிருந்ததை எண்ணி யெண்ணி வியக்காமல் இருக்க முடியாது.

அகத்தியர் தம் பழைய நூல்களிலும் "நயனவிதி - 500" "சுச்ராதசம்மிதை" ஆகிய நூல்களில் வியத்தகு முறையில் அறுவை சிகிச்சைகளையும் அதில் பயன்படக் கூடிய நுண்ணிய கருவிகளையும் (Surgical Instruments) பற்றி விவரிக்கப்பட்டிருப் பதைக் காண்கின்றோம். அக்காலத்தில் அறுவை சிகிச்சையில் சீரும் சிறப்பும் பெற்று நம் சித்த மருத்துவர்கள் வல்லுனர்களாக இருந்தது நன்கு புலனாகின்றதன்றோ. அவர்கள் தம்முடைய தபோ மகிமையாலும் அருள் திறத்தாலும் மூலிகைகளின் குணங்களை அறிந்து பயன்படத்தக்க மருந்துகள் பலவற்றை வகுத்துக்கொடுத்து நோய் தணிக்கச்செய்த நன்மைகள் பலப்பல.

சித்த மருத்துவம் பெரும்பாலும் மூலிகைகளைக்கொண்டே வியாதிகளைக் குணப்படுத்தும் பெருமையினை உடையது, உதாரணமாக நேத்திர சம்பந்தமாக நோய்கள் பலவற்றையும் குணப்படுத்தக்கூடிய மூலிகை ஒன்று உள்ளது. இம் மூலிகை, சாதாரணமாகத் திருப்பதிமலை போன்ற மலைப்பிரதேசங்களில் தான் அதிகம் காணலாம். ஆனால் தமிழ் நாட்டில் சில சமவெளிப் பிரதேசங்களில் வேலிகள் ஓரமாகப் படரக்கூடிய கொடியாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு கணுவிலும் நான்கு இலைகள் உண்டு. அதன் மலர் நாகசர்ப்பத்தைப் போன்று சிறு வெண்மையும் சிவப்பும் கலந்த நிறத்தில் தென்படும். இதற்கு "சாளேஸ்திரப் பூண்டு" என்றும் "நாவிலை நேத்திரமூலி" என்றும் "நாளிலை நாகதாளி" என்றும் பல பெயர்கள் இட்டு அழைக்கின்றனர்.

செய்முறை :-

இதன் இலை, கொடி முதலியவைகளைச் சுத்தமாகத் தண்ணீரில் விட்டு அலம்பி அவற்றை உரலில் இட்டு இடித்து வாய் அகன்ற பீங்கான் அல்லது கோப்பைப் பாத்திரத்தில்விட்டு வேண்டு மளவிற்கு சுத்தமான எள் எண்ணெய் சேர்த்து மூன்று அல்லது நான்கு நாட்கள் சூரிய புடம் அதாவது வெய்யிலில் தூசி புகாமல் வைத்து ஒவ்வொரு நாளும் இந்த மூலிகையைக் கிளறிக்

கொண்டு வரவேண்டியது. சூரிய வெப்பம் நன்ருக இருந்தால் எண்ணெய் தெளிவாகப் பச்சை நிறத்தில் காணப்படும். வடி கட்டிப் பத்திரப்படுத்திக் கொண்டு தினம் காலை மாலை 2 முதல் 10 சொட்டுகள் வரை கண்ணில் விட்டு வந்தால் கண் சம்பந்தமான ரோகங்கள் 96-ம் பூரண குணமாகும். இது என் அனுபவம். அண்மையில் Eale's Disease with Vitreous Haemorrhage in both eyes என்ற வியாதி உள்ளவர் என்னிடம் வந்தார். அவருக்குச் சுத்தமாக இரண்டு கண்களும் சூரிய வெளிச்சத்தைக் கூடக் காணமுடியாமல் இருந்தது. இந்த மூலிகையின் சக்தியால் இழந்த பார்வையை மீண்டும் அடைந்தார். நீங்கள் அறிந்தால் மிகவும் ஆச்சரியம் அடைவீர்கள். ஆங்கில மருத்துவர்கள் பார்வையே இனி வராது என்று அழுத்தமாகக் கூறிவிட்ட நோயாளி இவர். மேலும் நீண்டகால உபயோகத்தில் Cataract, Glaucoma) போன்ற வியாதிக்கு இம் மூலிகையே நிகரற்ற நிவாரணியாகும். இதை இரண்டு தலை முறையாக உபயோகித்து வருகிறேம். ஆகையினல் இதை ஒவ்வொருவரும் தாமே உபயோகித்து நற்பயனை அடைய வேண்டும் என்ற காரணத்தால் இங்குச் சுருக்கமாகக் கூறியிருக்கின்றேன்.

பழனி முருகனைப் பற்றி அறியாதார் யாரும் தமிழ் நாட்டில் இருக்க முடியாது. பதினெண் சித்தர்களில் ஒருவராகிய போகரால் ஸ்தாபிக்கப்பட்டது மூல விக்கிரகம் ஒன்பது பாஷாணங்களைக் கொண்டு கட்டிய நவ பாஷாணக் கட்டாகும். அந்த போகர் சீனவில் சென்று நம் சித்த மருத்துவக்கலை யாவும் அங்கு பரவும்படி செய்தார். சீனவில் இன்றும் சித்த மருத்துவக் கலையே பயன் பட்டு வருகின்றது என்பதை, அவர்கள் மூலிகைகளைக் கொண்டே தயாரித்த கஷாயங்களை அருந்துவதைக்கொண்டே அறியலாம். ஒவ்வொரு கிராமப் பள்ளிகளிலும் மூலிகைகளை வளர்த்து இன்றும் பயன்படும்படிச் செய்கின்ருர்கள். மேலும்சமீப காலத்தில் சீனர்கள் தங்கம், வெள்ளி, இரும்பு, செம்பு இவற்ருலாகிய ஊசிகளைக் கொண்டே வியாதிகளுக்கு ஏற்ருற்போல் நரம்புகளில் அந்த ஊசிகளைக்குத்தி வியாதிகளைக் குணப்படுத்தியிருப்பதை, திருமதி நிக்ஸன் அவர்கள் பார்த்து வியந்து இருப்பதைப் பேப்பரில் பார்த்திருக்கலாம். அதே கலை நம் இந்தியாவில் இன்று மறைந்து மாரியம்மன் கோயில்களில் செடில் (அதாவது செடில் உற்சவம்) குத்திக் கொள்வதை இன்றும் காணலாம். அதனல் பற்பல வியாதிகள் நீங்கி மக்கள் இன்றும் இன்புற்று வருகிருர்கள். இச்சிறந்த சித்த மருத்துவம் எப்போதும் குடத்தினுள் இட்ட விளக்காக இல்லாமல் குன்றின்மேல்இட்ட விளக்காக யாவருக்கும் பயன்படும்படி எங்கும் பிரகாசிக்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

(மலர் 32, இதழ் 7, பக்கம் 334ன் தொடர்ச்சி)

[திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் பெருவிழாவை யொட்டி நிகழ்ந்த திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு 14—5—73 திங்கட்கிழமை முதல் தொடங்கி 24—5—73 வியாழக்கிமை முடிய உள்ள நாட்களில் சிறப்பாக நடைபெற்றது. சங்கத் தமிழ், சைவத் தமிழ், பிரபந்தத் தமிழ், தருமைத் தமிழ் என்ற பகுப்பில் விரிவுரைகளும், பொம்மலாட்டம், நாட்டிய நாடகம் முதலிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. மாநாட்டின் தொடக்கத்தில் திருமுறைப்பாடல்கள் பண்ணிசைவாணர்களால் பாடப்பட்டன]

17—5—73 வியாழக்கிழமை – சைவத்தமிழ் :

இறைவணக்கம், வரவேற்புரைகளுக்குப் பின்னர், சென்னை, தமிழ்நாடு கல்வித்துறை இயக்குநர், திரு. எஸ். வி. சிட்டி பாபு எம். ஏ., பி. டி., அவர்கள் ஆற்றிய தொடக்க உரையின் சுருக்கம்:

“சைவத் தமிழ் பற்றிப் பேசப்பெறும் இன்றைய நாளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு கிடைத்ததைப் பெரும்பேருகக் கருதுகின்றேன். இங்கு உயர்பள்ளி முதலிய கல்வி நிறுவனங்கள் வைத்துக் கல்விவளர்ச்சி சிறப்பாகப் போற்றப்பெறுகிறது. திருக்குவளையில் உள்ள உயர்பள்ளிக்கு நிலம் அளித்துள்ளார்கள். மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்க ஏற்பாடு செய்திருக்கிருர்கள். சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்பட்ட ஏழைக் குழந்தைகளுக்கு இலவச உணவு அளிப்பது போற்றத்தக்கது.

“அற்ருர் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்ருன் பொருள் வைப்புழி”

என்று கூறுகிருர் வள்ளுவர். அன்பு, அறிவு, அறம், ஒழுக்கம் என்ருல் என்ன என்பதையும் நன்கு விளக்கியுள்ளார் வள்ளுவர். அழிபசி தீர்த்தலாகிய அறநெறியில் நிற்கும் தருமையாதீனம் செய்யும் அறப்பணிக்குக் கல்வித் துறையைச் சேர்ந்தவன் என்ற முறையில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.”

சென்னை, திருக்கோயில் ஆசிரியர், சித்தாந்தப் புலவர்மணி, புலவர், திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல்.. அவர்கள்

'நால்வர் நற்றமிழ்' என்ற தலைப்பில் பேசும்போது, திருஞான சம்பந்தர் 1300 ஆண்டுகளுக்கு முன்னதாக சைவசமயப்பிரசாரம் செய்திருக்கிறார். அவர் கல்வியின் சிறப்பைப் பல இடங்களில் எடுத்துக் கூறியுள்ளார். "கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்" என்றும், தாம் பாடிய முதல் பதிகத்தில் "கற்றல் கேட்டல் உடையார் பெரியார்" என்றும் கூறியுள்ளார். சுந்தரர், "கற்ற கல்வியினும் இனியான்" என்றும், அப்பர் சுவாமிகள் 'கல்வியில் கரையிலாத காஞ்சிமாநகர்" என்றும் கூறும் இடங்கள் பலவற்றையும் எடுத்துக் காட்டி விளக்கினார்கள்.

திருப்பனந்தாள், செந்தமிழ்க் கல்லூரி முதல்வர், திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ., அவர்கள் மெய்கண்ட தமிழ் என்ற தலைப்பில், மெய்கண்டார் அருளிய சிவஞான போதத்தின் சிறப்பியல்புகளை விவரித்து சைவ சித்தாந்தக் கொள்கைகள் மெய்கண்டாரால் முடிவு செய்யப்பெற்றன என்று குறிப்பிட்டார்கள்.

18—5—73 வெள்ளிக்கிழமை – சைவத்தமிழ் :

குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (குன்றக்குடி அடிகளார் எம். எல். சி) அவர்கள் ஆசியுரையில், "சமயஉலகில் திருமுறைகளுக்குச் சிறப்பிடம் தரவேண்டும். ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் மத வேதங்களைப் போற்றுவதைப்போல திருமுறைகள் போற்றப்படவேண்டும்" என்று தெரிவித்தார்கள்.

சென்னை, கலைமகள் ஆசிரியர், செந்தமிழ்ச் செல்வர், திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ., அவர்கள் 'புராணத் தமிழ்' என்ற தலைப்பில் ஆற்றிய விரிவுரையில், புராணங்களில் பலவகை உண்டு. மகாபுராணம் பதினெட்டு. உபபுராணம் பதினெட்டு. இவைகளில் தென் மொழிப் புராணங்கள் இலக்கியச் சுவை மிக்கவை. அவைகளில் சைவர்களுக்குக் கண்கள் போன்றவை மூன்று புராணங்கள் அவை கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் என்பனவாகும் என்று கூறி அவற்றில் சில பாடல்களை விளக்கினார்கள்.

19—5—73 சனிக்கிழமை - சைவத்தமிழ் :

சென்னை, முன்னாள் உயர்மன்ற நீதிபதி, மாண்புமிகு. திரு. ஆர். சதாசிவம் பி. ஏ., எம். எல்., அவர்கள் தமது சிறப்புரையில், "தமிழ் தொன்மையான மொழி; சிறந்த மொழி; தமிழ் சிறந்த

மொழியாதல்போல நம் சமயம் சிறந்த சமயமாகும். 'சிவனே டொக்கும் தெய்வம் தேடினும் இல்லை என்ற திருமூலர் திருமந்திரம் இதனை வலியுறுத்தும்' என்று குறிப்பிட்டார்கள்.

தேவகோட்டை, தருமையாதீனப்புலவர், பாலகவி, வயிநாகரம், திரு. வே. இராமநாதஞ் செட்டியார் "திருமூலர் தெய்வத் தமிழ்" என்றதலைப்பில் விரிவுரையாற்றுகையில் "யோகநெறியை சிவயோகக் கலையாக மாற்றியவர் திருமூலர் என்றும், அகத்திற் கண்கொண்டு காண்பது ஆனந்தம் என்று திருமூலர் தெரிவிக்கிறார்" என்றும் கூறினார்கள்.

அடுத்து, சிதம்பரம் தில்லை கணபதி கான சங்கீத நாடக சபையினரின் "சிவதாண்டவம்" நாட்டிய நாடக நிகழ்ச்சி நடைபெற்றது.

20—5—73 ஞாயிற்றுக்கிழமை - பிரபந்தத்தமிழ் :

சென்னை, அகில இந்திய வானொலி நிலையம் திரு. மீ. ப. சோமசுந்தரம் அவர்கள் ஆற்றிய சிறப்புரையில், தருமையாதீன குருமகாசந்நிதானங்களின் சிறப்பியல்புகளை விரித்துப்பேசி பதினாறுவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பாடல் பாடி மழை பெய்வித்தருளிய அற்புதச் சிறப்பை விளக்கினார்கள். அடுத்து, தமிழ் நாட்டின் இசைக் கலைக்கு முதலில் துணைக் கருவியாகப் பயன்பட்டது சாரங்கி என்னும் வாத்தியம்தான் என்பதையும், வயலின் துணைக் கருவியாக வந்த வரலாற்றையும் விளக்கினார்கள்.

பூம்புகார் பேரவைக் கல்லூரி, முதுகலைப் பேராசிரியர், திரு. வை. இரத்தினசபாபதி எம். ஏ., பி. ஓ. எல்., அவர்கள் 'சிவப்பிரகாசர் கற்பனை" என்ற தலைப்பில் ஆற்றிய விரிவுரையில். சிவப்பிரகாசர், கற்பனைக் களஞ்சியம் என்ற சிறப்பினைப் பெறுதற்குரிய பொருத்தத்தை விளக்கினார்கள்.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர், திருநெறிச் செம்மல் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் "குமரகுருபரர் இலக்கியம்" என்ற தலைப்பில் ஆற்றிய விரிவுரையில், மனிதனைப் பாடிய இலக்கியங்களைத் தெய்வங்களைப் பாடுவதன் மூலம் அறிவு ஆன்மா இரண்டற்கும் பயன் விளைக்கும் முறையில் குமரகுருபரர் படைத்தார் என்று தெரிவித்தார்கள்.

சிதம்பரம், தில்லை கணபதிகான சங்கீத நாடக சபையினரின் "வள்ளித் திருமணம்" நாட்டிய நாடக நிகழ்ச்சியோடு கூட்டம் இனிது நிறைவுற்றது.

21—5—73 திங்கட்கிழமை - பிரபந்தத்தமிழ் :

வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்களின் வரவேற்புரைக்குப் பின்னர் சென்னை, உயர்மன்ற நீதிபதி. மாண்புமிகு. திரு. எஸ் மகராசன் பி. ஏ., பி. எல்., அவர்கள் சிறப்புரையாற்றுகையில், "தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின், அருளாற்றலை இன்று உணர்ந்தேன். குருபக்தி என்பது சமய வாழ்விற்கு இன்றியமையாதது. குரு ஞானசம்பந்தர் தம் குருநாதர்மீது பக்தி செலுத்திப் பாடிய பாமாலைகள் பல. அவையனைத்தும் அவர்களின் குருபக்தியை வெளிப்படுத்தும் திறனுள்ளவை" என்று வெளியிட்டார்கள்.

அடுத்து, சென்னை, கந்தசாமி நாயுடு கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், திரு. தெ. ஞானசுந்தரம் எ. ஏ. டிப். (வடமொழி) அவர்கள் "பட்டினத்தார் பக்தி" என்ற தலைப்பில் பேசினார்கள். முழுமுனிவராக விளங்கும் பட்டினத்தடிகளது தூய பக்தியை அவர்தம் விரிவுரை விளக்கிற்று.

தொடர்ந்து, தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை, வித்துவான், திருமதி. ப. நிலா அவர்கள் "தாயுமானார் சமரசம்" என்ற தலைப்பில் ஆற்றிய விரிவுரையில், "சமய வேற்றுமைகளைக் கடந்த ஞானிகள், சைவ சமயத்தினை அரசு நிலையில் அமர்த்தி, ஏனைய சமயங்களைப் படிநிலைகளில் கொள்கின்றனர். அதனைத் தாயுமானவர் தெளிவுசெய்கின்றார்" என்ற கருத்தை வெளியிட்டார்கள்.

"அன்பே சிவம்" என்ற நாட்டிய நாடகம், சிதம்பரம் தில்லை கணபதி கான சங்கீத நாடக சபையினரால் நிகழ்த்தப்பட்டது.

22—5—73 செவ்வாய்க்கிழமை - பிரபந்தத்தமிழ் :

திருச்சிராப்பள்ளி, தேசியக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. சோ. சத்தியசீலன் எம். ஏ., பி. டி., அவர்கள் "படிக்காசுப் புலவர்" என்ற தலைப்பில் ஆற்றிய விரிவுரையில், "தொட்டாலும் கைமணக்கும், சொன்னாலும் வாய்மணக்கும், தூய்ய சேற்றில் நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளையும் என்று படிக்காசுப் புலவரின் பாடல் நளினத்தை விளக்கிப் பேசினார்கள்.

தொடர்ந்து, தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், திரு. இரா. செல்வக்கணபதி அவர்கள் "சிவஞான முனிவர்" என்ற தலைப்பில் ஆற்றிய விரிவுரையில், "சிவஞான

முனிவர் இயற்றிய தமிழ் இலக்கண இலக்கியங்கள் ஆழ்ந்த சிறப்புடையனவாகும். வடமொழிப் பேரறிவும், செந்தமிழ்ப் புலமையும் தர்க்கவாத அறிவோடு இணைந்துவிட்டால் அது எங்ஙனம் சிறக்குமென்பதற்குச் சிவஞான முனிவரின் திராவிட மாபாடியமாகிய சிவஞானபோதப் பேருரையே சான்றாகும். ஒப்பற்ற சாத்திர அறிவோடு, கற்பனையும் வளமும் பூத்துக் குலுங்கும் பல்வேறு சிற்றிலக்கியங்களையும் படைத்துத் தமிழிலக்கிய உலகில் தனிப்பாதை அமைத்த பெருஞ்சிறப்பு எண்ணி வியக்கத்தக்கது" என்று குறிப்பிட்டார்கள்.

அடுத்து, சிதம்பரம், தில்லை கணபதி கான சங்கீத நாடக சபையினரின் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வரலாற்று நாட்டிய நாடக நிகழ்ச்சியோடு விழா இனிது நிறைவுற்றது.

23—5—73 புதன்கிழமை - தருமைத்தமிழ் :

சென்னை, உயர்மன்ற நீதிபதி, மாண்புமிகு. திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் பி. ஏ., பி. எல், அவர்கள் ஆற்றிய சிறப்புரையில், "இன்றையநாள் தருமையாதீனத்தை நிறுவியருளிய ஸ்ரீ குருஞானசம்பந்தரின் குருபூசைத் திருநாள். இந்நாளே தருமைத் தமிழ் பற்றிப் பேசுவதற்கு மிகமிகப் பொருத்தமான நாளாகும். ஸ்ரீ குருஞானசப்பந்தர் ஸ்ரீ சொக்கநாத வெண்பா முதலிய பல அருட் பனுவல்களை அருளியிருக்கின்றார்கள்" என்ற பல கருத்துக்களை வெளியிட்டார்கள்.

அடுத்து, திருச்சிராப்பள்ளி, திருக்குறள்வேள், திரு. ஜி. வரதராசப் பிள்ளை பி. ஏ,, அவர்கள் "சிவபோகசாரம்" என்ற தலைப்பில் சிவபோகசாரப் பாடல்கள் பலவற்றிற்கு விளக்கம் கூறி ஸ்ரீ குருஞானசம்பந்தரின் அருள் நூலாகிய இதனை அனைவரும் கற்று சிவபோகத்தை நுகரவேண்டும் என்று தெரிவித்தார்கள்.

24—5—73 வியாழக்கிழமை - தருமைத்தமிழ் :

பொள்ளாச்சி, தொழிலதிபர், திரு. நா.மகாலிங்கம் பி.எஸ்.சி. எம். ஐ. இ. அவர்கள் சிறப்புரையாற்றுகையில் 'ஆதி குருமூர்த்தியின் குருபூஜைத் திருநாள் நேற்று நிகழ்ந்தது. இன்று 26 வது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பட்டணப்பிரவேசமாக எழுந்தருளி அருட் காட்சி வழங்கும் நாள். இந்நாளில் ஆதீன அருள் நூல்கள் பற்றிய சொற்பெருக்கைக் கேட்டு மகிழ்ந்து, குருவழிபாடு நிகழ்த்துவது நம் அனைவரின் கடமையாகும்" என்று குறிப்பிட்டார்கள்.

மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், செஞ் சொற்கொண்டல், டாக்டர். திரு. சொ. சிங்காரவேலனர் எம். ஏ., பி. எச். டி., அவர்கள் '' ஆதீன அடியவர் அருள் நூல்கள் " என்ற தலைப்பில் ஆற்றிய விரிவுரையில், "ஸ்ரீ ஆபதுத்தாரணர், ஸ்ரீ வெள்ளியம்பலவாணர், ஸ்ரீ குமரகுருபரர், ஸ்ரீ சமபந்தசரணலயர், படிக்காசு முனிவர் போன்றவர்கள் பாடிய பக்தி இலக்கியங்கள் தமிழிலக்கியங்களில் அரிய படைப்புக்கள்" என்று தெரிவித்தார். மதுரை, மாநகராட்சி, உயர்பள்ளித்தமிழாசிரியர், வித்துவான், திரு. தா. குருசாமி அவர்கள் "பண்டார மும்மணிக் கோவை" என்ற தலைப்பில் பேசுகையில், குருநாதர் மீது சீடர் கொண்டுள்ள பக்திக்கும் மரியாதைக்கும் எடுத்துக்காட்டான நூல் என்று கூறினர்.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், சிரோமணி, வித்துவான், திரு. வி. சபேசன் அவர்கள் "சொக்க நாத வெண்பா" என்பதுபற்றிப் பேசுகையில், 'ஸ்ரீ குருஞான சம்பந்தர் தம் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதப் பெருமான்மீது அவ்வப்போது பாடிய அருட்பாடல்கள் கொண்டது என்றும், இலக்கிய நோக்கோடு பார்ப்பவர்களுக்கு சிறந்த இலக்கியமாகவும், சாத்திர நோக்கோடு பார்ப்பவர்களுக்கு சாத்திரமாகவும் சிறந்து திகழ்கின்றது" என்று கூறினர்.

உருத்திராக்கம்

"உருத்திராக்க முண்ண, மிருத்துமில்லை தானே" என்ற ஏற்றப்பாட்டு இப்போது கால மாறுபாட்டால் தலை காட்டாது மாறிவிட்டது. கைக்குழந்தைகளின் இருமல் முதல் பெரியோர்களின் காசரோகம் வரையில் இந்த உருத்திராக்கம் பாட்டிமார்களின் வீட்டுச் சரக்காய் நின்று கார உருண்டைபோல் உரைமருந்தாகவோ, ஊறல்கஷாயமாகவோ, மேல் பற்று பூசுதல் மூலமாகவோ உபயோகமாகி ஒவ்வொரு குடும்பத்தையும் பாதுகாத்து வருதல் முன்னைநாள் வழக்கம்.

ஸ்நான ஜலத்திலும், பானம் செய்யும் தீர்த்தத்திலும் துளசியைப்போல உருத்திராக்கத்தையும் சற்றுநேரம் ஊறவைத்துப் பின் உபயோகிப்பது, பூர்வகாலச் சுகாதார முறைகளில் முக்கியமானது.

—"வேலன்" — நன்றி. "குமரிமலர்", 'மஞ்சரி"

செய்திகள்

தருமையாதீனத்தில் :

திருக்கயிலாயத் திருவுருவப்படத் திருவீதியுலா

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள், திருக்கயிலாய மலையைத் தரிசித்துப் பேரானந்தம் எய்திய சிவபுண்ணிய தினம், சமயா சாரியர்களில் ஒருவராகிய ஸ்ரீ அப்பர் சுவாமிகள் கயிலைக் காட்சி கண்டு மகிழ்ந்த ஆடி அமாவாசைத் திருநாளாகும்

29—7—73 ஞாயிற்றுக்கிழமை ஆடி அமாவாசைத்திருநாளில், திருக்கயிலாய தரிசனம் செய்ததன் நினைவாகக் கொண்டாடப் பெறும் பதினைன்காம் ஆண்டு நிறைவு விழா, தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப் பாங்கின் வண்ணம், சென்ற ஆண்டைப்போலவே இவ்யாண்டும் சிறப்பாக நிகழ்ந்தது.

காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் பூஜை மடத்தில் திருக்கயிலாயத் திருவுருவப்படத்திற்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சிறப்பு வழிபாடு நிகழ்த்தி னர்கள். திருமுறைப் பாராயணம் அகண்ட பாராயணமாக நிகழ்த்தப்பட்டது. நண்பகல் மாகேஸ்வரபூஜையும், பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்துடன் வெள்ளி ரதத்தில் திருக்கயிலாயத் திருவுருவப்படத் திருவீதியுலாவும் சிறப்புற நிகழ்ந்தன

சைவப் பெருமக்கள் முதலிய அன்பர்கள் பலர் வந்து வழிபட்டு, திருவீதியுலாவிலும் கலந்து கொண்டு குருவருள் பெற்றனர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவீதி யுலாவிற்கு எழுந்தருளி அருட்காட்சி வழங்கினர்கள்.

ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் பூஜைமடத்தில் மாலை 5 மணி முதல் சமயப்பேரவை நிகழ்ந்தது. திரு. சி. அருணைவடிவேல் முதலியார் "நக்கீரரும் கயிலையும்" என்பது பற்றியும், வித்துவான். திரு வி. சா. குருசாமி தேசிகர், "அப்பரும் கயிலையும்" என்பது பற்றியும், டாக்டர், திரு. சொ. சிங்கார வேலனர், M. A. Phd., "சேரமானும் கயிலையும்" என்பது

பற்றியும். வித்துவான். சிரோமணி, திரு. வி. சபேசன், "சுந்தரரும் கயிலையும்" என்பது பற்றியும், வித்துவான், திரு. இரா. செல்வக்கணபதி, "சேக்கிழாரும் கயிலையும்" என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் 5—8—73 ஞாயிற்றுக்கிழமை சைவ சமயாசாரியர்களுள் ஒருவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. வேதபாராயணம், பண்ணிசைவாணர்களின் திருமுறைப் பாராயணம் இவற்றுடன் வெள்ளையானை வாகனத்தில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளும், குதிரை வாகனத்தில் ஸ்ரீ சேரமான் பெருமாள் நாயனரும் திருவீதியுலாவாக எழுந்தருளும் அருட்காட்சி நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி, அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கியருளினர்கள்.

திருவீதியுலாவில், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், டாக்டர். திரு. சொ. சிங்காரவேலனர் M. A., Phd. வித்துவான், திரு. வி. சபேசன், வித்துவான், திரு. இரா. செல்வக்கணபதி ஆகியோர், அற்புத விளக்கச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள். அன்பர்கள் பலர் வழிபட்டும் கேட்டும் மகிழ்ந்தனர்.

திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி விழா

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் விஜயம்

சைவ சமயத்தின் பெருமையை நிலைநாட்டத் திருஞானசம்பந்தரால் மதுரையம்பதியில் சமணர்களோடு செய்த அனல் வாதத்தில் பச்சைப்பதிகமாய் விளங்கிய "போகமார்த்த" என்ற வெற்றித் திருப்பதிகத்தை உடைய சப்தவிடங்கத் திருத்தலம் திருநள்ளாறு. மூவர் தேவாரத் திருப்பதிகங்களையும் பெற்ற தலம் இது. இத்தலத் திருப்பதிகங்கள் தனிச்சிறப்புடையவை.

"வளங்கெழுவு தீபமொடு தூபம்மலர் தூவி
நளன் கெழுமி நாளும் வழிபாடுசெய் நள்ளாறே"

என்று ஞானசம்பந்தப் பெருமான் திருவாக்கில் நளன் வழிபட்டு அருள்பெற்ற நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றூர்கள். நளனைப் பற்றியிருந்த சனி விலகிய திருத்தலமாதலின் சனிக்கிழமை களிலும் சனிப் பெயர்ச்சிக் காலங்களிலும் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான மக்கள் வந்து நளதீர்த்தத்தில் நீராடி வழிபடுவர்.

சனிப்பெயர்ச்சி நன்னுளை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரர் திருக்கோயிலுக்கு எழுந்தருளி சிறப்பு வழிபாடு நிகழ்த்தத் திருவுளம் பற்றினூர்கள். ஸ்ரீதர்ப்பாரண்யேசுவரர் முதலியமூர்த்தி களுக்கு விசேட அபிடேக ஆராதனைகள் நிகழ்த்தி அமைதியான சூழ்நிலையில் வழிபாடு நிகழ்த்த வேண்டுமென்ற விழைவோடு, மக்கள் கூட்டம் பெருகுவதற்குள்ளாக 6—7—73 வெள்ளிக்கிழமை யன்று காலையிலேயே திருக்கோயிலுக்கு எழுந்தருளினூர்கள்.

உலகநலம் கருதி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அனைத்து மூர்த்திகளுக்கும் விசேட அபிடேக ஆராதனைகளை மிகச் சிறப்பாக நிகழ்த்துவித்தார்கள். ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவர சுவாமிக்குப் பஞ்சமுகார்ச்சனையும், ஸ்ரீ போகமார்த்த பூண்முலை அம்மைக்கு நவசக்தி அர்ச்சனையும், ஸ்ரீ சனீஸ்வரபகவானுக்கு சகஸ்ர நாம அர்ச்சனையும் செய்வித்து வழிபாடாற்றினூர்கள்.

இந்நன்னுளில், நித்தியவழிபாடு சிறக்கவேண்டி, இறையவர் திருமேனிகளுக்குப் பாலாபிடேகம் நாளும் நடைபெறக் கறவைப் பசு ஒன்றினையும் திருக்கோயிலுக்கு வழங்கியருளினூர்கள்.

இவ்யாண்டு சனிப்பெயர்ச்சி விழா 10—7—73 அன்று நடை பெற்றது. சனிபகவான் ரிஷப ராசியிலிருந்து மிதுனராசிக்குச் செல்லும் நாள் இது. மூன்று லக்ஷத்திற்கு மேற்பட்டவர்கள் வந்திருந்து சனிபகவானையும் நள்ளாற்றிறைவனையும் அம்பிகை யையும் வழிபட்டனர்.

சனிப் பெயர்ச்சி விழாவை முன்னிட்டு 10—7—73 அன்று காலை 8 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திரு நள்ளாற்றுக்கு எழுந்தருளினூர்கள். கட்டளை மடத்தில் நன்கு அலங்கரிக்கப்பெற்றிருந்த கொலுமேடையில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களை எழுந்தருளச்செய்து, கட்டளைவிசாரணை வித்துவான். ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் வழி பாடியற்றினூர்கள். தேவஸ்தானப் பிரசாதங்கள் பார்க்கப் பெற்றன.

காலை 9 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அடியவர் புடைசூழத் திருக்கோயிலுக்கு எழுந்தருளினார்கள். சுவாமி அம்பாள் தியாகேசர் சனிபகவான் சந்நிதிகளில் தேவாரத் திருப்பதிகங்களும் கோளறு திருப்பதிகமும் ஓதச் செய்து சிறப்பு வழிபாடு நிகழ்த்தியருளினார்கள்.

சென்னை உயர்மன்ற நீதிபதிகள் கனம். திரு. பழனிசாமி அவர்களும், கனம். திரு. இராமசாமி அவர்களும், திருமதி. சௌந்தரா கைலாசம் அவர்களும், கீழத்தஞ்சை மாவட்ட நீதிபதி திரு. நஞ்சுண்டான் அவர்களும், பலதுறைகளைச் சேர்ந்த உயர் அலுவலர்களும் பக்தர்களும் வந்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்து அருளாசி பெற்றுச் சென்றனர்.

காலை 11 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏழைகட்கு எண்ணெய் அறப்பு முதலியவற்றை வழங்கியருளினார்கள்.

ஆதீனப் பணியாளர்கள் தேவஸ்தானப் பணியாளர்கள் திருமுறைப்பணியாளர் முதலியோர்க்குப் புத்தாடைகள் வழங்கி யருளினார்கள்.

நண்பகல் 1 மணிக்கு மாகேசுவரபூசை நிகழ்ந்தது. ஆயிரத் திற்கும் மேற்பட்ட ஏழைகளுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பெற்றன.

மாலை 4 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர் கள் ஆதீனத்திற்குச் சொந்தமான காரைக்காலுக்கு அருகி லுள்ள தருமபுரம் ஸ்ரீ யாழ்மூரிநாதசுவாமி திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபட்டார்கள்.

இரவு 8.30 மணி அளவில் புதுவை மாநில ஆளுநர் மேதகு செட்டிலால் அவர்களும் அவர்கள் துணைவியாரும், முதலமைச்சர் மாண்புமிகு திரு பரூக்மரைக்காயர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் திரு இராமச்சந்திரன் அவர்களும் கட்டளைமடத்திற்கு வந்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வழிபட்டு அருளாசி பெற்றார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆளுநர் அவர்கட்கும் அமைச்சர்களுக்கும் பொன்னாடைகள் அணிவித்து வாழ்த்தியருளினார்கள்.

இரவு 9 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், ஆளுநர் அவர்கள் முதலமைச்சர் பெருமக்கள் பக்தர்கள் முதலியோருடன் திருக்கோயில் வழிபாட்டுக்கு எழுந்தருளினர்கள். முறையே சுவாமி தியாகேசர் அம்பாள் சந்நிதிகளில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்தன. 9-30 மணி அளவில் சனிப் பெயர்ச்சி நேரத்தில் ஸ்ரீ சனிபகவான் சந்நிதியில் விசேஷ அர்ச்சனை ஆராதனைகளுடன் வழிபாடு நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் அனைவர்க்கும் பிரசாதங்கள் வழங்கி மாலைகள் அணிவித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் விஜயம்காரணமாக வெளியிடப்பட்ட 'திருநள்ளாற்றுத் தலச் சிறப்பும், கோளறு திருப்பதிகமும்' என்ற நூல் அன்பர்கட்கு வழங்கப்பெற்றது.

தருமை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

திருவையாற்றுக்கு எழுந்தருளல்.

திருக்கயிலாய பரம்பரையின் முதல் சந்தானாசாரியராகிய திருநந்திதேவர் அவதரித்ததும், திருநாவுக்கரசருக்கு இறைவன் திருக்கயிலாயக் காட்சி வழங்கியருளியதும், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் காவிரி தன் வெள்ளத்தை ஒதுக்கி வழி விட்டதும், சப்தஸ்தானத் தலங்களில் முதன்மையானதும் ஆகிய திருவையாற்றில் உள்ள ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி திருக்கோயில் தருமை ஆதீன அருளாட்சிக்கு உட்பட்டது.

ஐயாறதனில் சைவனாகியும் என்று மாணிக்கவாசக சுவாமிகளால் போற்றப்பெற்ற ஸ்ரீ ஐயாற்றிறைவன் ஸ்ரீ அறம்வளர்த்த நாயகியோடு எழுந்தருளி விளங்கிய இத்தல வழிபாட்டிற்குத் தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞான பீடமேறிய பின்னர் முதன்முறையாக 12—8—73 ஞாயிறன்று எழுந்தருளுகின்றார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றோம். அன்று சுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறப்புற நிகழ்த்தப்பெறும்.

உ
குருபாதம்

தருமை ஆதீனம்

ஸ்ரீ ஞானம்பிகை உடனுய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கு

கோடி அருச்சனை

உயிர்கள் ஒருவர் காட்டக் காணும் இயல்பினவேயன்றித் தாமே காணும் வன்மையில்லாதன. 'காண்பார் யார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே' என்பது தேவாரங் காட்டும் உண்மை. தாய் காட்டவே தந்தையை உணர்கிறோம். அதுபோல ஞானசாரியராகிய குருநாதன் வழிகாட்டவே உயிர்கள் இறைவனைச் சென்றடைய முடியும். இதனால்தான் வழிகாட்டும் குருவினையே சிவமாகப் போற்றிக் 'குருவே சிவமெனக் கூறினன் நந்தி' எனத் திருமூல நாயனாரும் அருளிச்செய்தார்.

சைவ குருபீடங்களுள் சிவநெறியும் - செந்தமிழும் விளக்கும் தருமையாதீனம் நானூறாண்டு வரலாற்றுச் சிறப்புடையது. இதனைத் தோற்றுவித்தருளிய அருளாளர் ஸ்ரீகுருஞானசம்பந்தர். தென்பாண்டி நாட்டில் அவதரித்து, ஆலவாய்ச் சொக்கனை ஆன்மார்த்த மூர்த்தியாக அடைந்து, திருக்கயிலாய பரம்பரையில் வழிவழி வந்த கமலை ஞானப்பிரகாசரிடம் அருளுபதேசம்பெற்று, துறவு நெறி துலக்கி, தருமையம்பதியில் திருமடம் கண்டு, அருள் நூல்கள் எட்டினை ஆக்கித்தந்து, ஆனந்தபரவசர்க்கு அருள் நலம் வழங்கி, சிவநெறி விளைத்து ஜீவசமாதி கூடிய பெருங்கருணை வெள்ளமாக விளங்கியவர்கள்.

வேண்டுவார்க்கு வேண்டுவன விரைந்தீயும் விமலராக ஸ்ரீஞானம்பிகை உடனுய ஸ்ரீஞானபுரீசுவரர் சிவலிங்கத் திருமேனி கொண்டு அருள் வழங்கும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஜீவசமாதி கூடிய இத்திருக்கோயில் அருள் அற்புதங்களின் உறைவிடமாக விளங்கும் பெருஞ்சிறப்புடையது. தருமையாதீனம் ஏழாவது குருமூர்த்திகளின் காலத்தே, இத்திருக்கோயிலை, உடன் வந்தவர்களின் துர்போதனையால் 'சூத்திரசமாதி' என இகழ்ந்த தஞ்சை மன்னன் கண் இழந்து வருந்தி, பிழைக்கு இரங்கியபின் அருள் பெற்ற வரலாறு சைவ உலகும் - தமிழுலகும் அறிந்த ஒன்று.

அடியவராகத் தொடங்கி, குருவாக உயர்ந்து, அன்பர்களை ஆட்கொண்டு ஜீவசமாதி கூடியபின் அருவுருவத் திருமேனி பூண்டு அருள் வழங்கும் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில்

குரு, லிங்க, சங்கமம் என்ற மூன்று நிலைகளிலும் சைவ-நல்லன்பர்களுக்கு அருள் வழங்கும் பீடுடையது.

தற்போது தருமையாதீனத்தின் 26வது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் ஞானபிடேகம் செய்விக்கப்பெற்ற சிறப்புக்குரியவர்கள். நாட்டில் நடைபெறும் அரசியல், சமூக சமுதாயப் பூசல்கள் அகன்று, பசியும் பிணியும் நீங்கி, வசியும் வளனும் சுரக்கவேண்டி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம். தம்முடைய குருமூர்த்திகளாகிய ஸ்ரீ ஞானம்பிகை உடனுய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்ம நட்சத்திரத்தன்று தொடங்கி சகஸ்ரநாம அர்ச்சனரூபமாகக் கோடி அருச்சனை நடைபெற்று வருகிறது. இது வரை எட்டு லக்ஷத்திற்குமேல் பூர்த்தியாகியுள்ளது. வேண்டுவோர்க்கு வேண்டுவன வழங்கும் வரப்பிரசாத மூர்த்தியாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரரின் கோடியர்ச்சனைத் தொடரில் சைவ அன்பர்கள் பலரும் பங்குகொண்டு உய்திபெற வேண்டுமென்ற நோக்கத்தில் கீழ்க்கண்டவாறு ஏற்பாடுசெய்யப்பெற்றுள்ளது.

சுவாமி, அம்பாள் சகஸ்ரநாம அர்ச்சனை இரண்டுக்கும் ரூ. 10—00 கட்டணமாகும். நேரில் வர இயலாதவர்கள் தருமையாதீன மேலாளர் அவர்களுக்குப் பணவிடை செய்தால் அருச்சனைசெய்து பிரசாதங்கள் அஞ்சல்வழி அனுப்பிவைக்கப்பெறும். கோடியருச்சனைத் தொடரில் கலந்துகொண்டு குருவருளும் திருவருளும் பெற்று அன்பர்கள் உய்வார்களாக.

குருவின் முன்னிலையில்

அகங்காரம் மதயானை போன்றது; மதயானையை மாவுத்தனுல்கூட அடக்கமுடிவதில்லை. ஆனுல் சிங்கத்தைக் கண்டால் அது நடுங்கி ஒடுங்கி விடுகிறது. அகங்காரம் நம்முடைய முயற்சியால் அடங்குவதில்லை. அடங்குவது போல் தோன்றினுலும் மறுபடியும் எழும்பிவிடும். சிங்கத்தைப் போன்ற குருவின் சந்நிதியில் அதன் வலி குறையும். குருவின் திருவருள் கிடைக்குமானுல் அது அடியோடு ஒழிந்துவிடும். — ரமணமகரிஷி.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

திரு. K. முத்துஜோதிடர்

(பிரமாதீசஹு ஆவணிமீ 1உ முதல் 31உ முடிய)

(17—8—73 முதல் 16—9—73 முடிய)

ஸ்வஸ்திஸ்ரீ பிரமாதீச வருஷம் ஆடி மாதம் 32 ஆம் தேதி வியாழக்கிழமை பூரட்டாதி நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 48-25 க்கு விருஷப லக்னத்தில் பூரட்டாதி நான்காம் பாதத்தில் ஸ்ரீ லோகரக்ஷகரான ஸ்ரீ சூரியபகவான் சிம்மராசியில் பிரவேசம் செய்கிறார். ஷை பிரவேசகாலபலன்:

உலகெங்கும் சுபிக்ஷமும், சஸ்ய விருத்தியும் தனதான்ய விருத்தியும் தெய்வசக்தி பிரகாசித்தலும், மேலோர் பெரியோர்களெல்லாம் நடமாடும் தெய்வம்போல் பிரகாசித்தலும், உணவுப் பொருள்கள் விருத்தியாகி விலைவாசிகள் குறைய ஆரம்பித்தலும் எங்கும் சீரான மழையும் பிரஜைகளுக்கு சத்புத்தியும், தெய்வபக்தி ஓங்குதலும் ஏற்படும்.

குறிப்பு :- மிதுனராசியில் சனி, கேது சம்பந்த வசத்தால் எவ்வளவு சுபிக்ஷ சூசனை இருந்தாலும் வடக்கு வடமேற்கு மாகாணம் த்வீபாந்தரங்கள் கேரளா முதலிய தேசங்களில் எதிர்பாராதபடி பயத்துக்கு ஹேதுவும், உத்பாதங்களும் ஏற்பட்டு விலகும்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். காரியங்கள் எல்லாம் சாதிக்கமுடியும்; மேல்பதவியோடு உத்தியோகத்தில் மாறுதல் உண்டாகும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். வியாதி நிவர்த்தியாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

விருஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். கூட்டுத்தொழில் ஆரம்பமாகும். சஸ்ய தான்ய விருத்திகள்

ஏற்படும். ஆரோக்யக்குறைவு ஏற்பட்டுப் பிறகு வியாதியும் நிவர்த்தியாகும். ஸ்திரமான ஜீவனம் ஏற்படும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். தூரதேசப் பிரயாணம் ஏற்படும் சுப சோபனாதி மங்கள காரியங்கள் ஏற்படும். அதிகமான செலவுகள் ஏற்படும். நண்பர்களிடத்தில் சிநேகம் குறையும். செவ்வாய், புதன் சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். வெகு காலமாக நடக்காமல் இருந்த காரியங்கள் எல்லாம் நடக்கும். அடிக்கடி தெய்வ வழிபாடுகள் ஏற்படும். தெய்வசக்தி பிரகாசிக்கும். ஆரோக்யம் உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தைத்தரும். உலகத்தில் பிரசித்தி ஏற்படும். ஜீவனம் விருத்தியாகும். குடும்பம் ஓங்கும். மேலோர் பெரியோர்களின் அன்பினால் சகலமும் சாத்தியமாகும். ஆரோக்யம் உண்டாகும். சனி. ஞாயிறு சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். உறவினர்கள் நண்பர்களின் போக்கு வரத்து அதிகமாகும். குடும்பத்தில் அடிக்கடி சுபமான காரியங்கள் ஏற்படும். மேலோர் பெரியோர்களின் ஆசியால் சகல காரியங்களும் சாதிக்க முடியும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். தன தான்ய விருத்தி ஏற்படும். குடும்பத்தில் சுபசோபனாதி காரியங்கள் ஏற்படும். உலகத்தில் கீர்த்தி ஏற்படும். எல்லோரிடத்திலும் நன்மதிப்பு ஏற்படும். சந்தோஷம் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். வரவு, செலவு சமமாக இருந்து கொண்டு இருக்கும் குடும்பத்தில் தொல்லைகள் அதிகமாகும் தெய்வ வழிபாடுகளால் எல்லாம் சௌகரியமாக ஆகிவிடும் புதிதாக பிரதிஷ்டைகள் செய்யும்படி நேரும். வெள்ளி, சனி சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். அதிகமான உழைப்பால் குடும்பம் தழைக்கும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். எப்பொழுதும் தெய்வ பலம் முன்னின்று காக்கும். புதிதாகத் தொழில் ஏற்பட்டு கொஞ்சம் லாபம் தரும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

10. மகரம்-உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம்

மகரராசி 9 பாதங்களும் பூரணமாக சுபமான பலனைத் தரும். ஜீவனம் ஓங்கும். குடும்பம் தழைக்கும். மேலோர் பெரியோர்களால் நன்மை உண்டாகும். கீர்த்தி, பத்திரம் கிடைக்கும் ஆரோக்யம் உண்டாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் ½-சதயம் -பூரட்டாதி-¾

கும்பராசி 9 பாதங்களும், மிச்ரமான பலனைத்தரும். அதிகமான உழைப்பினால் சுகம் ஏற்படும். தூரதேசத்திலிருந்து பொருள்கள் வந்து சேரும். வியாதி சாந்தி ஏற்படும். மேலோர் பெரியோர்களின் அன்பினால் சகலமும் சாதிக்க முடியும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

12. மீனம் - பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி

மீனராசி 9 பாதங்களும் பூரணமாக சுபபலனைத் தரும். தெய்வ வழிபாடுகளும் ஏற்படும் ஜீவனம் விருத்தியடையும். இல்லற சுகம் அதிகமாகும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும் ஆரோக்கியம் தரும், சுபம் உண்டாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

தருமையாதீன வெளியீடு:

நித்திய கன்மநெறி

(பொழிப்புரையுடன்)

தருமையாதீனத் திருக்கூட்டத்து அடியவர்களில் ஒருவராய் விளங்கிய ஸ்ரீ சிதம்பரநாத முனிவர் இயற்றிய நூல் இது. 55 குறள் வெண்பாக்களால் அமைந்தது.

தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூசை விழா மலராக 23—5—73 ஆம் நாள் வெளியிடப் பெற்றது.

இந்நூலில் அவசிய கருமம், தத்தசுத்தி, ஸ்நானம், அனுட்டானம், சூரியபூசை, சிவபூசை, செபம், போசனவிதி முதலிய தலைப்புக்களில் சைவ ஆசார சீலங்கள் பலவும் உணர்த்தப்படுகின்றன.

சிவாகமங்களில் விதிக்கப்பெற்ற சமய வீதிகளைத் தொகுத்துத் தமிழில் இதனை ஸ்ரீ சிதம்பரநாத முனிவர் அருளியுள்ளார். சமயநெறிகளின் உயர்வை அறிந்து கடைப்பிடித்தற்குரிய அரிய சாதனம் இந்நூல்.

தருமையாதீனம் இருபத்தாறுவது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் நிறுவியருளிய ஞானசம்பந்தம் பதிப்பகம் அறக்கட்டளையிலிருந்து வெளிவருவது. இந்நூலின் விற்பனைத்தொகை ஞானசம்பந்தம் பதிப்பக அறக்கட்டளை நிதியைச் சாரும். பக்கங்கள் 185.

சைவப் பெருமக்கள் அனைவரும் பெற்றுப் பயனுற வேண்டிய நூல். விலை ரூ. 1—50. அஞ்சற் செலவு 20 காசு. பெற விரும்புவோர் :-

செயலாளர்,
ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமபுர ஆதீனம் – மாயூரம் அஞ்சல்,
தஞ்சாவூர் மாவட்டம்.

உ

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி

தருமபுரம், மாயூரம்.

—: வெள்ளிவிழா மலர் :—

செந்தமிழும் சிவநெறியும் விளக்கும் அருள்ஞானப் பண்ணை தருமையாதீனம். தருமையாதீன வரலாற்றில் பொற்காலம் படைத்த ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் அருளில் கனிந்த தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி, ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட, சைவ நலஞ்சிறந்த - பண்பாடு மிக்க நல்ல தமிழ்ப்புலவர்களை நாட்டுக்கு வழங்கிய பெருமிதத்தில் கடந்த ஆண்டில் தனது வெள்ளிவிழாவினை விறு பெறக் கொண்டாடி மகிழ்ந்தது.

பல்கலைக் கல்லூரியைக் கண்ணெனப் பேணிப் புரந்து வரும், 26வது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் செந்தமிழ் நலம் கொழிக்கும் அருளுரையோடு விழாவை ஒட்டி வண்ண விழாமலர் ஒன்று வெளியிடப்பெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர். கலைஞர். திரு. மு. கருணாநிதி அவர்களால் வெளியிடப்பெற்ற முன்னூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்களோடு அமைந்த இவ்வரிய மலரில் ஆதீனக் குருமகாசந்நிதானங்கள், அமைச்சர் பெருமக்கள், சான்றோர்களது வாழ்த்துரைகள் முதற்கண் அணிசெய்கின்றன.

தமிழகத்துச் சான்றாண்மை மிக்க அறிஞர்கள் தீட்டிய முப்பதுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும், கவிதைகளும் சிந்தனைக்கு விருந்தாகும் பெற்றியுடையன. உலக அரங்கில் வள்ளுவத்தை ஒப்பிட்டு எழுதப்பெற்ற பேராராய்ச்சிக் கட்டுரைகள்; ஆராய்ச்சி நிகழ்த்தப்பெறாத புலவர் பெருமக்களது புலமைத் திறனாய்வுகள்; தமிழில் விளைந்துள்ள புத்திலக்கிய மறுமலர்ச்சிகளைச் சுவைபட ஆயும் படைப்புக்கள், மற்றும் திருக்கோயில் அமைப்புக்கள், கல்வெட்டுச் செய்திகள், பழமொழிப் பாகுபாடுகள் இப்படிப் பலப்பல. ஒரு தமிழ்க்கல்லூரியிலிருந்து வெளிவரும் விழா மலர் என்ற எண்ண எழுச்சியை மலரில் எங்ஙனும் சுவைத்து மகிழலாம்.

அனைவரும் படித்து மணத்தை நுகர்ந்து போற்றத் தக்க சிறப்புடைய மலர். கல்லூரி முதல்வரோடு தொடர்பு கொண்டு அன்பர்கள் பெற்று நலம்பெறக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அடக்க விலை ரூ. 7—00 அஞ்சற் செலவு தனி.